# திருமுருகன் பேருருவக் காட்சி

## (கந்தபுராணம்)




JPL
M13820

உரை

புலவர் ஆ. பொன்னையா

குமக வெளியீடு

யாழ். மாநகர சபை

முக்கிய அறிவித்தல்

பொதுசன நூலகம்

யாழ்ப்பாணம்,

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல் வெட்டுதல் கிழித்தல் அழித்தல் அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடு களை செய்ய வேண்டாமென மிகத் தாழ் மையாகக் கேட்டுக் கொள்கின்றோம். புத்த கங்களை நீங்கள் எடுக்கும்போது இப்படி யான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூல கப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப் பந்தமும் ஏற்படும்,

[illegible]

97

உ

சிவமயம்

கச்சியப்ப சிவாசாரியார் அருளிய

# கந்தபுராணம் காட்டும்

# திருமுருகன் பேருருவக் காட்சி

(விசுவரூப தரிசனம்)

பொதுசன நூலகம்
06 MAY 2003
யாழ்ப்பாணம்

உரை ஆக்கம்

பண்டிதர் புலவர் கவிஞர் சித்தாந்த இரத்தினம்

மேலல்வையூர் **ஆ. பொன்னையா**

**Diploma in Saiva Siddhanta (Annamalai University)**

13820

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,
522, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை – 18.
www.tamilputhagam.com
e-mail:tamilkazhagam@hotmail.com

294.5925

## நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர் : **கந்த புராணம் காட்டும் திருமுருகன் பேருருவக் காட்சி**
(விசுவரூப தரிசனம்)

உரையாசிரியர் : சித்தாந்த இரத்தினம்
மேலல்வையூர் **ஆ. பொன்னையா**

வெளியீட்டு எண் :

மொழி : தமிழ்

பதிப்பு : முதற் பதிப்பு 2003

06 MAY 2003

உரிமை : ஆசிரியர்

பதிப்பாளர் : சைவ சித்தாந்தக் கழகம், சென்னை-18.

தாள் அளவு : 70 ஜிஎஸ்எம்

நூலின் அளவு : 10.5 x 17.5

பக்கங்கள் : 52

விலை : ரூ. **15 . 00**

நூல் வடிவமைப்பு : முனைவர் இரா. வேலாயுதம்
பாலவாக்கம், சென்னை-41.
தொலைபேசி : 044-24925319

அச்சிட்டோர் : அப்பர் அச்சகம்

## பதிப்பாசிரியர் உரை

தமிழ்க் கடவுள் முருகனின் அருளை எடுத்துக் கூறுவது கந்தபுராணம். ஒரு நேரத்தில் காப்புக் கடவுள் திருமால், பிரம்மன், இந்திரன் முதலியோருக்கு இன்னல் ஏற்பட்ட போது, முருகப் பெருமானின் செயல்திறன்களை அறிந்து அவரை நாடிச் சென்றனர். அவரும் அவர்களுக்காக சூரபன்மனுடன் போர் புரிந்து வென்று வந்தார்.

இவ்வாறாக முருகப்பெருமானின் மாண்பினை உணர ஆசிரியர் அவர்கள் 'சூரபன்மன் வதை' படலத்தை எடுத்துத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இங்கு சூரபன்மன் கண்ட திருமுருகன் பேருருவக் காட்சியை மனதிலே நிறுத்தி எல்லோரும் மகிழ்வோமாக.

*-சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.*

சாதி, மத, மொழி கடந்தும், கோளங்களின் ஈர்ப்புகளைக் கடந்தும், கந்தபுராணம் தன் ஆவியை உயர்த்திக் கொண்டிருக்கிறது. உலக மனித நேயத்திற்கு வித்திடுகிறது. சமயக் கண்ணாடியைத் தவிர்த்துப் பார்த்தால் பலருக்கும் பாசமிகும் காவியம் இது ஆகும். எங்கே சர்வாதிகார அவுணக் கூட்டம் உண்டோ அங்கெல்லாம் காந்த காவியம் நுழைந்து ஒளியும் சாந்தியும் நல்கும்!

கந்தபுராண உயிர் இடை இடையே ஒளிர்ந்து கொண்டிருக்கும் படலம் சூரபன்மன் வதை. காலப் பொருத்தம் நோக்கிப் போலும்....

'வாணி'
கரவெட்டி.

**க. வீரகத்தி**
முன்னாள் இலக்கணச்
சிறப்பாய்வாளர்,
தஞ்சைப் பல்கலைக்கழகம்

## என் வழியில்.....

வருடங்கள் பல கடந்து வந்த யான் சிறிது பின்னோக்கிப் பார்க்கிறேன். 1970ம் ஆண்டு பொலிகைவாழ் கந்தவனக் கடவையில் கந்த சஷ்டியின் போது 'சூரபன்மன் வதைப் படலத்தைப் 'புராண படனம்' செய்யும் வாய்ப்பு முருகன் அருளால் கிட்டியது. இதில் எனக்கு ஊக்கம் ஊட்டியவர் திரு. இரத்தினம் அவர்கள். இவர் துகளறு போதம் என்னும் நூலுக்கு உரை கண்ட திக்கம் செல்லையா பிள்ளை அவர்களின் மைத்துனர். அன்று முதல் நான் கந்தபுராணப் படிப்பை விட்டுப் பிரியவில்லை. 1986ம் ஆண்டு திருச்செந்தூரில் கந்த சஷ்டியின் போது 506 பாடல்களையும் அடியார்கள் கூட்டத்தின் ஆதரவில் படித்துப் படனம் செய்தேன். முருகன் இதைப் படிக்கக் கேட்க விரும்பினார் போலும்.

1992ம் ஆண்டு சூரபன்மன் வதைப்படலத்தை வெளியீடு செய்தேன். எனது தமிழ் ஆசிரியர் பிள்ளைத் தமிழ்க்கவி பண்டிதர் திரு. வ. சிவராச சிங்கம் எம்.ஏ., அவர்கள் இதற்கு உரை எழுதி உதவினார்கள். இவரைத் தெரியாத சைவ அபிமானிகள் எவரும் இல்லை.

1998ம் ஆண்டு தொடக்கம் கந்தபுராணம் முழுவதும் கொழும்பு புதிய கதிரேசன் கோயில் மண்டபத்தில் புராண படனம் செய்யப் பெற்று வருகின்றது. இதுவே ஆறுமுக நாவலர் காட்டிய யாழ்ப்பாணத்துக் கந்தபுராண கலாச்சாரம் என்பர் பண்டிதமணி பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்கள். இந்த உண்மையை கந்த சஷ்டியின் போது யாழ்ப்பாணத்தில் நேரடியாகவே எவரும் அனுபவித்து மகிழலாம்.

சைவ சித்தாந்தப் நூற்பதிப்புக் கழக நிருவாக இயக்குநர் திரு. ஆர். முத்துக்குமாரசுவாமி M.A., B.Lib., அவர்களைச் சந்திக்கும்

வாய்ப்பு அண்மையில் கிட்டியது. அவர்கள் திருமுருகன் பேருருவக் காட்சியைப் பதிப்பிக்க விரும்பினார்கள். அடியேன் கந்த புராணத்தில் பயிற்சி உள்ள காரணத்தால் அதனை எழுதித் தருவதாக ஒப்புக் கொண்டு 5 நாட்களில் இதனை எழுதி முடித்தேன். அவர் இதனை அச்சேற்றி வெளியிட்டுப் பெருமகிழ்வு கொண்டார்கள். இன்று இந்நூல் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு பாடலிலும், வரியிலும், எழுத்துக்களிலும் முருகன் காலடி பட்டுக் கொண்டிருக்கின்றது. இதை உணர்ந்து படிப்பவர்களுக்கு முருகன் திருவருள் கிட்டும். இதில் சந்தேகமில்லை.

இதனைச் செய்யும்படி என்னைத் தூண்டிய கழக இயக்குநர் திரு. ஆர். முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் நன்றி. என்றும் அவர்களுக்கு முருகன் துணை நிற்பன்.

எனது தமிழ் ஆசிரியர் 'வாணி' முதல்வர் பண்டிதர் கவிஞர் திரு. க. வீரகத்தி (கவீ) அவர்களுக்கு இந்நூல் காணிக்கை.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

கச்சியப்ப சுவாமிகள் திருவடி வாழ்க!

பொலிகை முருகன் அருள் எங்கும் பொலிக!!

திக்கம், முருகனடிமை

9-4-2002. **ஆ. பொன்னையா**

உ
சிவமயம்

## கந்த புராணம் பற்றி எனது தமிழ் ஆசிரியர்
## பண்டிதர் **திரு. க. வீரகத்தி (கவீ)**

### தடுத்தது மானம் ஒன்றே

சாகும் தறுவாயில் தோல்வி கண்டு மண்டி இட்டுக் கொண்ட நிலையில் சூரபன்மன் கூறிய "சாவேளாண்மை" வார்த்தைகள் இவை. வைரம் பாய்ந்த இம்மூன்று வார்த்தைகளின் வெளிச்சப் பக்கத்தை வெளிப்படுத்தவும் புலப்படுத்தவும் ஆக ஏறத்தாழ ஒரு இலட்சம் வார்த்தைகள் கந்தபுராணப் பரவையில் நிலை கொண்டுள்ளன.

ஆம். இம்மூன்று வார்த்தைகளில் தூங்கும் பாரிய பலாக்கனிதான் கந்தபுராணம். சுவைத்துப் பார்ப்பவர்களுக்கு இது புரியும்.

மனிதனின் - மனித ஆத்மாவின் உன்னத அதிஉன்னதங்களைத் தொட்டுக் காட்டுகிற அல்ல, சுட்டிக் காட்டுகிற தத்துவார்த்த மகா காவியங்களில் கந்த புராணத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு.

"சமம்" என்ற சொல்லடியிலிருந்து பிறந்தது சமயம். மனிதனைச் சமநிலைப்படுத்தும் சமயநெறி என்பது இதற்குப் பொருள். சமநிலைப் படுத்தல் என்ற உயர்ந்த நிலைக்குப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கும் மகத்தான பணியை உவப்பாக ஏற்றுக் கொண்டிருக்கிறது கந்த புராணம்.

'முத்துக் குளிப்பவர்களுக்கு' இது ஒரு 'கனதி'யான காவியம். பித்தம் தெளியாதவர்களுக்குக் கந்தபுராணம் ஒரு 'பார' காவியமாம். புராணம் என்ற சொல்லைக் கண்டதுமே பலருக்கு 'அலர்ஜி'. கச்சியப்பர் அதற்கு என்ன செய்யலாம். க(ா)ந்த காவியம் எனப் பெயர் பெற்றுக் கொண்டிருந்தால் சர்வ சனங்களையும் சுண்டி இழுத்துக் கொண்டிருக்கும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணம்

## விநாயகர் வணக்கம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உச்சியில் மகுடம் மின்ன ஒளித்தர நுதலின் ஓடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ரக் கணபதிக் கன்பு செய்வாம்.

## சுப்பிரமணியக் கடவுள் வணக்கம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## நூற்பயன்

இந்திரர் ஆகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

### கச்சியப்ப சிவாசாரியார் அருளிய

## கந்தபுராணம் காட்டும்

# திருமுருகன் பேருருவக் காட்சி

### (விசுவரூப தரிசனம்)

தோற்றமும் முடிவும் இல்லாத அருட்பெரும் ஞான வள்ளல் ஆகிய சிவபெருமான், தேவர்களின் துன்பத்தையும் துயரையும் அச்சத்தையும் நீக்க வேண்டித் தனது நெற்றிக் கண்ணிலே ஆறு பொறிகளைத் தோற்றுவித்துச் சரவணப் பொய்கையில் விடுவிப்ப அப்பொறிகள் ஆறு திருமுகங்களைக் கொண்டு தோன்றியது. இதனை,

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

என முருகனின் திரு அவதாரத்தைக் கந்தபுராணம் எடுத்துக் கூறுகின்றது.

முருகன் அவதாரத்தை அறிந்த திருமால், பிரமன், இந்திரன் மற்றும் தேவர்கள் அனைவரும் முருகப் பெருமானிடம் தங்கள் குறை இரந்து தம்மைக் காத்தருள வேண்டினர். குமரவேள் பெருமான் தாய் தந்தையரிடம் விடை கொண்டு அசுரர் தலைவன் சூரபன்ம னுடன் போருக்குப் போனார்.

ஏமகூடம் என்னும் கதிர்காமத்தில் போர்ப்பாசறை அமைத்துத் தனது தம்பியாகிய வீரவாகு தேவரைச் சூரனிடம் தூதனுப்பினார். சூரனும்

வீரவாகுவின் வார்த்தைகளை எல்லாம் துச்சமாக மதித்து நின்றான். இதன் பின்னர் முருகப் பெருமான் சூரனை எதிர்கொண்டு போர் புரிந்தார்.

போரிலே சூரபன்மனின் தம்பியர்களாகிய தாரகன், சிங்கமுகாசுரன் முதலான அசுரர்கள் அழிந்தனர். போரின் கடைசி நாளன்று சூரபன்மன் தானே போருக்கு எழுந்து முருகனை எதிர்கொள்ளுகின்றான். முருகனுடைய போர் வலிமைக்கு ஆற்றாது அசுரர் குலம் முழுவதும் அழிகின்றது. போர்க்களத்திலே சூரபன்மன் ஒருவனே தனிமையாக நிற்கின்றான். தன்னுடைய படைகள் பட்ட பாட்டைச் சூரபன்மனே சொல்லுவதைப் பாருங்கள்.

எண்ணிலா அவுணர் தானை யாவையும் இமைப்பில் செற்று
விண்ணுலா அண்டம் தோறும் வியன்சமர் ஆற்றி என்பால்
நண்ணினார் தம்மை எல்லாம் நாம்அறத் தடிந்து வீட்டி
வண்ணமான் தேரும் மீண்டு வராநெறி தடுத்தான் மன்னோ

இவ்வாறு போர் செய்து தனித்து நிற்கும் சூரனைப் பார்த்து முருகப் பெருமான் பின்வருமாறு கூறுகின்றார்.

ஓ! சூரபன்மனே! இவ்வளவு காலமும் நீ என்முன்னே அழிதற் தன்மையனவாகிய பல்வேறு வடிவங்களை எடுத்துப் போர் புரிந்தாய். அந்த மாய வடிவங்கள் யாவற்றையும் யாம் எனது அம்புகளினாலே அழித்துவிட்டோம்.

இதோ! என் வடிவத்தை நீ பார். என்றும் அழிதலில்லாத எனது வடிவத்தைக் கண்டுகொள் எனக் கூறி அடியும் முடியும் அறியமுடியாத ஒரு பேருருவத்தை - பரமேசுவர வடிவத்தை - விசுவரூபத்தை - தோற்றம் கொண்டு அருளினார்.

அவ்வுருவத்தை வஞ்சமனத்தோன் ஆகிய சூரபன்மன் விம்மிதத்தனாகிக் கண்டு நின்றான். தேவர்களுக்கு எம் பெருமான் 'அஞ்சன்மின் அஞ்சன்மின்' என அபய கரம் நீட்டி அவர்க்கும் தன்னைக் கண்டு தரிசிக்கும்படி செய்தார். அக்காட்சியைக் கந்த புராணம் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியார் வெகு அழகாக எடுத்துக் காட்டுகின்றார். அக்காட்சியை நாமும் அகக் காட்சியாய்க் காணுவோம். வாருங்கள் நூலினுள்ளே!

உடல்சின மோடு சூரன்
ஒருவனாய் அங்கண் நின்றான்
அடல்வலி கொண்ட வாளி
அந்தர நெறியால் மீண்டு
புடையுறு சரங்க ளோடு
பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடும் தனிவேல் அண்ணல்
அவன்முகம் நோக்கிச் சொல்வான் (420)

பதவுரை :

**உடல் சினமோடு சூரன்** - சூரபன்மன் மாறுபாடு கொண்டு போர் செய்யும் சினம் மிக்கவனாய் **ஒருவனாய் அங்கண் நின்றான்** - தான் எடுத்துக் கொண்ட மாயவடிவங்களெல்லாம் முருகப் பெருமானுடைய அம்புகளால் அழியப் பெற்றவனாய் அப்போர்க் களத்திலே தானே ஒருவனேயாகித் துணைவர்கள் எவரும் இன்றித் தனித்து நின்றான். **அடல்வலி கொண்ட வாளி** - போர் வலிமை கொண்டு சென்ற முருகன் செலுத்திய அம்புகள் சூரபன்மன் எடுத்த மாய வடிவங்கள் யாவற்றையும் அழித்து வெற்றி பெற்றன. **அந்தர நெறியால்** - அவை விண் வழியாக மிக விரைவாகத் திரும்பி **மீண்டு புடையுறு சரங்களோடு** - முன்பு போலவே முருகப் பெருமானின் பக்கலிலே தொங்கிக் கொண்டிருக்கும் அம்புகளோடு **பொள்ளெனத் தூணிபுக்க** - அம்புக் கூட்டினுள்ளே புகுந்து கொண்டன. **சுடர்நெடும் தனிவேல் அண்ணல்** - ஞான ஒளிக் கற்றைகளை எக்காலத்தும் வீசி நிற்கின்ற இணையற்ற வேற்படையைத் தனது திருக்கரத்திலே தாங்கிய ஒப்பற்ற தலைவராகிய முருகப் பெருமான் **அவன்முகம் நோக்கிச் சொல்வான்** - அச் சூரபன்மனுடைய முகத்தை நோக்கி பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

பொழிப்புரை :

சூரபன்மன் மாறுபாடு கொண்டு போர் செய்யும் சினம் மிக்கவனாய், தான் எடுத்துக்கொண்ட மாய வடிவங்கள் எல்லாம் முருகப் பெருமானுடைய அம்புகளால் அழியப்பெற்றவனாய்

அப்போர்க்களத்திலே தானே ஒருவனேயாகித் துணைவர்கள் எவரும் இன்றித் தனித்து நின்றான். போர் வலிமை கொண்டு சென்ற முருகன் செலுத்திய அம்புகள் சூரபன்மன் எடுத்த மாய வடிவங்கள் யாவற்றையும் அழித்து வெற்றி பெற்றன. பின்னர் அவை விண்வழியாக, மிக விரைவாகத் திரும்பி முருகப் பெருமானின் பக்கலிலே தொங்கிக் கொண்டிருக்கும் அம்புக்கூட்டினுள்ளே புகுந்து கொண்டன. ஞான ஒளிக்கற்றையை எக்காலத்தும் வீசி நிற்கின்ற இணையற்ற வேற்படையைத் தனது திருக்கரத்திலே தாங்கிய ஒப்பற்ற தலைவராகிய முருகப்பெருமான் அச்சூரபன்மனுடைய முகத்தை நோக்கிப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

உடல் - மாறுபடல்.

**சுடர்நெடும் தனிவேல்** - ஞானசத்தி வடிவமான வேல்.

**வெம்புயல் இடையே தோன்றி**
**விளிந்திடும் மின்னு என்ன**
**இம்பரில் எமது முன்னம்**
**எல்லைஇல் உருவம் கொண்டாய்**
**அம்பினில் அவற்றை எல்லாம்**
**அட்டனம் அழிவி லாத**
**நம்பெரு வடிவம் கொள்வம்**
**நன்றுகண் டிடுதி என்றான்** (421)

பதவுரை :

**வெம்புயல் இடையே தோன்றி** - வெப்பம் மிக்க முகிற் கூட்டங்களுக்கு நடுவே தோன்றித் **விளிந்திடு மின்னு என்ன** - தோன்றியவுடனேயே அழிதற் தன்மைத்தான மின்னலைப் போல **இம்பரில் எமது முன்னம்** - இந்தப் போர்க்களத்திலே எனது முன்னிலையில் **எல்லையில் உருவம் கொண்டாய்** - எண்ணிக்கை சொல்ல முடியாத பல மாய வடிவங்களை நீ எடுத்துக் கொண்டாய். **அம்பினில் அவற்றை எல்லாம் அட்டனம்** - எம்மாலே செலுத்தப் பெற்றனவாய அம்புகளாலே அம்மாய வடிவங்கள் அனைத்தையும்

அழித்தோம். **அழிவிலாத நம்பெரு வடிவம் கொள்வம்** - என்றும் அழிதல் இல்லாத நிலைபேறுடைய நமது பேருருவத்தை எடுத்துக் கொள்வேன் **நன்று கண்டிடுதி என்றான்** - உமக்கு நன்மை விளையும்படியாக அப்பெருவடிவத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வாய் என்று எம்பெருமான் கூறியருளினார்.

பொழிப்புரை :

வெப்பம் மிக்க முகிற் கூட்டங்களுக்கு நடுவே தோன்றித், தோன்றியவுடனேயே அழிதற் தன்மைத்தான மின்னலைப் போல இந்தப் போர்க்களத்திலே எனது முன்னிலையில் அளவுகள் - எண்ணிக்கை - சொல்ல முடியாத பல மாய வடிவங்களை நீ எடுத்துக் கொண்டாய். எம்மாலே செலுத்தப் பெற்றனவாய அம்புகளாலே அம்மாய வடிவங்கள் அனைத்தையும் அழித்தோம். என்றும் அழிதலில்லாத நிலைபேறுடைய நமது பேருருவத்தை எடுத்துக் கொள்வேன். உமக்கு நன்மை விளையும்படியாக அப்பரமேசுவர வடிவத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வாய் என்று எம்பெருமான் கூறியருளினார்.

பேருரு - பரமேசுவர வடிவம், திருமேனி, விசுவரூபம்.

இம்பர் - பூமி, யுத்தபூமி, யுத்தகளம்

13820

**கூறிமற் றினைய தன்மை**
**குரைகடல் உலகம் திக்கு**
**மாறிலாப் புவனம் அண்டம்**
**வானவர் உயிர்கள் யாவும்**
**ஆறுமா முகத்து வள்ளல்**
**மேனியில் அமைந்த தன்றி**
**வேறிலை என்ன ஆங்கோர்**
**வியன்பெரு வடிவம் கொண்டான்.** (422)

பதவுரை :

**கூறிமற்றினைய தன்மை** - முருகப் பெருமான் மேற் சொல்லியவாறு கூறியவராய் **குரைகடல் உலகம் திக்கு** -

ஒலிக்கின்ற சமுத்திரங்கள், உலகங்கள், திசைகள் **மாறிலாப் புவனம் அண்டம்** - மாறுபாடுகள் இல்லாத புவனங்கள், அண்டங்கள் **வானவர் உயிர்கள் யாவும்** - தேவர்கள், பல்வகை உயிர்கள், இயங்கியல், இயங்காப் பொருள்கள் என இவையாவும் **ஆறுமா முகத்து வள்ளல்** - அழகுமிக்க ஆறு திருமுகங்களைக் கொண்டு விளங்கும் அருள் வள்ளலாகிய முருகப் பெருமானுடைய **மேனியில் அமைந்தது** - ஒப்பற்ற திருமேனியில் பேருருவில் அமைந்திருந்தன. **அன்றி வேறிலை என்ன** - அத்திருமேனியில் அல்லாமல் வேறெங்கும் அவை இல்லையாம்படியாக **ஆங்கோர் வியன்பெரு வடிவம் கொண்டான்** - அந்த இடத்திலே மிகப் பெரியதொரு வடிவத்தினைக் கொண்டருளினார்.

பொழிப்புரை :

முருகப் பெருமான் மேற்சொல்லியவாறு கூறியவராய், ஒலிக்கின்ற சமுத்திரங்கள், உலகங்கள், திசைகள் மாறுபாடு இல்லாத புவனங்கள், அண்டங்கள், தேவர்கள், பல்வகை உயிர்கள், இயங்கியல், இயங்காப் பொருள்கள் என இவை யாவும், அழகுமிக்க ஆறு திருமுகங்களைக் கொண்டு விளங்கும் அருள் வள்ளலாகிய முருகப் பெருமானுடைய ஒப்பற்ற திருமேனியில் - பேருருவில் - அமைந்திருந்தன. அத்திரு மேனியில் அல்லாமல் வேறெங்கும் அவை இல்லையாம்படியாக அந்த இடத்திலே மிகப் பெரியதொரு வடிவத்தினைக் கொண்டருளினார்.

**உள்ளடி வரைகள் யாவும்**
**ஒண்புறம் அடியில் நீத்தம்**
**வள்உகிர் விரல்கள் முற்றும்**
**வான்உரு மேறு நாள்கோள்**
**எள்அரும் பரடு தன்னில்**
**இரும்புனற்கு இறைவன் சோமன்**
**நள்இருள் அனைய மேனி**
**நிருதியோடு அரக்கர் நண்ண. (423)**

பதவுரை :

**உள்அடி வரைகள் யாவும்** - உள்ளங்காலின் நடுப்பகுதியில் மேரு முதலான மலைகளும் **ஒண்புறம் அடியில் நீத்தம்** - ஒளிபொருந்தி விளங்குகின்ற புறங்கால்களில் எல்லா நீர் நிலைகளும் **வள்உகிர் விரல்கள் முற்றும்** - கூரிய நகத்தோடு கூடிய பாதவிரல்கள் அனைத் திலும் **வான் உருமேறு நாள் கோள்** - வானிடத்தே தோன்றுகின்ற இடியேற்றுக் கூட்டங்களும் நட்சத்திரங்களும் கிரகங்களும் **எள்அரும் பரடு தன்னில்** - புகழத்தக்கதான பரடு என்னும் பாத உறுப்பினிலே **இரும்புனற்கு இறைவன் சோமன்** - பெரிய நீர்த்தொகுதிகளுக்குக் காரணமான பூத சூரியனும், பூத சந்திரனும் **நள்ளிருள் அனைய மேனி நிருதியோடு அரக்கர் நண்ண** - அவர்களுடன் கரிய இருள் வடிவத்தைப் போன்ற மேனி நிறம் கொண்டவர்களாகிய நிருதி என்பானும், அரக்கர்களும் பொருந்தி இருப்பவும்.

பொழிப்புரை :

உள்ளங்காலின் நடுப்பகுதியில் மேரு முதலான மலைகளும், ஒளி பொருந்தி விளங்குகின்ற புறங்கால்களில் எல்லா நீர் நிலைகளும், கூரிய நகத்தோடு கூடிய பாதவிரல்கள் அனைத்திலும் வானிடத்தே தோன்றுகின்ற இடியேற்றுக் கூட்டங்களும் நட்சத்திரங்களும் கிரகங்களும் (சூரிய சந்திரன் தவிர) புகழத்தக்கதான பரடு என்னும் பாத உறுப்பினிலே பெரிய நீர்த்தொகுதிகளுக்குக் காரணமான பூத சூரியனும் பூத சந்திரனும், அவர்களுடன் கரிய இருள் வடிவத்தைப் போன்ற மேனி நிறங் கொண்டவர்களாகிய நிருதி என்பானும் அரக்கர்களும் பொருந்தி இருப்பவும்.

வரைகள் - மலைகள், பூமிகள்.

**அடிதிரள் கணைக்கால் தன்னில்**
**ஆரிடர் மணிகள் சானு**
**வடிவமை முழந்தாள் விஞ்சை**
**வானவர் ஆதி யானோர்**

தொடைதனில் மகவான் மைந்தன்
தொடை முதல் நடுவன் காலன்
கடிதடத்து அசுரர் பக்கம்
கடவுளர் யாரும் நிற்ப. (424)

பதவுரை :

**அடிதிரள் கணைக்கால் தன்னில்** - பாதங்களின் மேற்புறமாகிய திரண்ட கணைக்கால் என்னும் பகுதியில் **ஆரிடர் மணிகள்** - முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணி வகைகளும் **சானு வடிவமை முழந்தாள் (தன்னில்)** - சானு என்னும் பெயரினைக் கொண்டு விளங்குகின்றதும், அழகாக அமைந்துள்ளதும் ஆகிய முழந்தாள் என்னும் தானத்தில் **விஞ்சை வானவர் ஆதி யானோர்** - வித்தியாதரர்கள் என வழங்கப் பெறும் தேவ இனத்தவர் முதலானோர் அமைந்திருப்பவும். **தொடைதனில் மகவான், மைந்தன்** - தொடைகளின் நடுப்பாகத்தே தேவேந்திரனும் அவன் மைந்தனாகிய சயந்தனும் (அமைந்திருப்பவும்) நிற்கவும். **தொடைமுதல் நடுவன் காலன்** - தொடையின் அடிப்பாகத்தில் இயமனும் அவன் துணைவரான காலனும் தோன்றி நிற்கவும் **கடிதடத்து அசுரர்** - திருஅரையிடத்திலே அசுர சாதியினர் பொருந்தி இருப்பவும் **பக்கம் கடவுளர் யாரும் நிற்ப** - விலாப் பக்கங்களில் தேவ சாதியினரான அமரர்கள் அனைவரும் முறைமுறை நிற்கவும்.

பொழிப்புரை :

பாதங்களின் மேற்புறமாகிய திரண்ட கணைக்கால் என்னும் பகுதியில் முனிவர்களும், சிந்தாமணி முதலிய மணி வகைகளும், சானு என்னும் பெயரினைக் கொண்டு விளங்குகின்றதும் அழகாக அமைந்துள்ளதும் ஆகிய முழந்தாள் என்னும் தானத்தில் வித்தியாதரர்கள் என வழங்கப்பெறும் தேவ இனத்தவர் முதலானோர் அமைந்திருப்பவும், தொடைகளின் நடுப்பாகத்தே தேவேந்திரனும், அவன் மைந்தனாகிய சயந்தனும் அமைந்து காணவும், தொடையின் அடிப்பாகத்தில் இயமனும் அவன் துணைவனான காலனும் தோன்றும்படி நிற்கவும், திருஅரையிடத்தினிலே அசுர சாதியினர்

பொருந்தி இருப்பவும், விலாப் பக்கங்களில் தேவ சாதியினரான அமரர்கள் அனைவரும் முறை முறை நிற்கவும்.

இருப்பினில் நாகர் கோச
எல்லையில் மருந்தே உந்திக்
கருப்படும் உயிர்கள் மார்பில்
கலைகள் முன்னூலில் போதம்
அருப்புஅயில் உரோமத்து அண்டம்
அங்கையில் அகில போகம்
திருப்பெரும் தடந்தோள் வைப்பில்
செங்கண்மால் விரிஞ்சன் மேவ. (425)

பதவுரை :

**இருப்பினில் நாகர்** - மூலாதாரத்தில் (குதத்தானத்தில்) சர்ப்ப சாதியினர் (நாக சாதியினர்) இருக்கவும், **கோச எல்லையில் மருந்தே** - இலிங்கத் தானத்தின் கண்ணே அமிர்தம் பொலிந்து தோன்றவும் **உந்திக் கருப்படும் உயிர்கள்** - திருநாபித் தானத்தில் (வயிறு - தொப்புள்) கருப்பை வாயிலாகப் பிறக்கும் உயிர்க் கூட்டங்கள் அமையவும், **மார்பில் கலைகள்** - திருமார்பினிடத்தே அறுபத்து நான்கு கலைகள் விளங்கவும் **முந்நூலில் போதம்** - முப்புரி கொண்டு விளங்கும் பூணூலிலே சிவஞான போதங்கள் காணும் படியாகவும், **அருப்பு அயில் உரோமத்து அண்டம்** - சிலிர்க்கும் இயல்புடைய அரும்பிய உரோமங்களில் அண்ட கோடிகள் அமையவும், **அம்கையில் அகில போகம்** - அழகிய கைகளிலே உலக போகங்கள் நிறைந்திருக் கவும், **திருப்பெரும் தடந்தோள் வைப்பில்** - சிறப்புமிக்க பெரிய விசாலித்த தோள்களில் **செங்கண்மால் விரிஞ்சன் மேவ** - தாமரை மலர் போலும் செவ்விய கண்களையுடைய திருமாலும் பிரமதேவரும் (காணும்படியாகவும்) தோற்றம் தரவும்.

பொழிப்புரை :

மூலாதாரத்தில் (குதத்தானத்தில்) சர்ப்பசாதியினர் (நாக சாதியினர்) இருக்கவும், இலிங்கத் தானத்தின் கண்ணே அமிர்தம் பொலிந்து தோன்றவும், திருநாபித் தானத்தில் (வயிறு - தொப்புள்) கருப்பை வாயிலாகப் பிறக்கும் உயிர்க் கூட்டங்கள் அமையவும், திருமார்பி னிடத்தே முப்புரி கொண்டு விளங்கும் பூணூலிலே சிவஞான போதங்கள் காணும்படியாகவும் சிலிர்க்கும் இயல்புடைய அரும்பிய உரோமங்களில் அண்ட கோடிகள் அமையவும், அழகிய கைகளிலே உலக போகங்கள் நிறைந்திருக்கவும், சிறப்புமிக்க விசாலித்த தோள்களில் தாமரை மலர் போலும் செவ்விய கண்களையுடைய திருமாலும் பிரம தேவரும் தோற்றம் தரவும்.

**மெல்இதழ் அனைய செங்கை**
**விரல்மிசை அணங்கின் நல்லார்**
**ஒல்ஒலி அங்கி கண்டம்**
**ஒப்பிலா மணிவாய் வேதம்**
**பல்இடை எழுத்து நாவில்**
**பரமஆ கமத்தின் பேதம்**
**நல்இதழ் மனுவின் விஞ்சை**
**நாசியில் பவனன் மன்ன.** (426)

பதவுரை :

**மெல்இதழ் அனைய செங்கை விரல் மிசை** - மென்மை பொருந்தியதும் செந்தாமரைப் பூவிதழ் போன்றும் விளங்குகின்ற சிவந்த கை விரல்களிலே **அணங்கின் நல்லார்** - சகல இன்ப சுகங்களையும் அளிக்கவல்ல தேவப் பெண்கள் அமைந்திருக்கவும் **ஒல்ஒலி அங்கி கண்டம்** - கழுத்திலே எல்லா வகைத்தான மந்திர ஒலிகளும் அக்கினியும் விளங்கி நிற்கவும் **ஒப்பிலா மணிவாய் வேதம்** - சமானம் சொல்லா முடியாத அழகிய திருவாயினில் நான்கு வேதங்களும் தோன்றி இருப்பவும் **பல்இடை எழுத்து** - பற்களிலே

51 எழுத்துக்கள் அமையவும் **நாவில் பரம ஆகமத்தின் பேதம்** - திருநாவினிடத்தே சிவ ஆகமங்களின் விரிவுகளும் அதன் பேதங்களும் **நல்இதழ் மனுவின் விஞ்சை** - நல்ல சிறப்புடன் விளங்கும் அதர இதழ்களிலே சப்த கோடி மகா மந்திரங்கள் தங்கி இருப்பவும் **நாசியில் பவனன் மன்ன** - மூக்கினிடத்தே வாயு தேவனும் முறை முறையாக அமையவும்.

பொழிப்புரை :

மென்மை பொருந்தியதும் செந்தாமரைப் பூவிதழ் போன்றும் விளங்குகின்ற சிவந்த கைவிரல்களிலே சகல இன்ப சுகங்களையும் அளிக்கவல்ல தேவப் பெண்கள் அமைந்திருப்பவும், கழுத்திலே எல்லா வகைத்தான மந்திர ஒலிகளும் அக்கினியும் விளங்கி நிற்பவும், சமானம் சொல்ல முடியாத அழகிய திருவாயினில் நான்கு வேதங்களும் தோன்றி இருப்பவும், பற்களிலே ஐம்பத்தோரு எழுத்துக்கள் அமையவும், திருநாவினிடத்தே சிவ ஆகமங்களின் விரிவுகளும் அதன் பேதங்களும், நல்ல சிறப்புடன் விளங்கும் அதர இதழ்களிலே சப்தகோடி மகா மந்திரங்கள் தங்கி இருப்பவும், மூக்கினிடத்தே வாயு தேவனும் முறை முறையாக அமையவும்.

**கருணைகொள் விழியில் சோமன்**
**கதிரவன் செவியில் திக்கு**
**திருநுதல் குடிலை வைப்புச்**
**சென்னியில் பரம ஆன்மா**
**மரபினில் மேவித் தோன்ற**
**மாறிலாது இருக்கும் தொல்லை**
**ஒருதனது உருவம் காட்டி**
**நிற்றலும் உம்பர் கண்டார்.** (427)

பதவுரை :

**கருணைகொள் விழியில் சோமன் கதிரவன்** - இயல்பாகவே அருள் பொழிகின்ற திருக்கண்களிலே ஞான சந்திரனும் ஞான

சூரியனும், **செவியில் திக்குத்** - காதுகளில் திகாந்தரங்களும், **திருநுதல் குடிலை வைப்புச்** - அழகிய நெற்றியில் பொலிகின்ற பிரணவமும், **சென்னியில் பரம ஆன்மா** - சிரசினிடத்திலே பரவான்மாவாகிய பரசிவமும் **மரபினில் மேவித் தோன்ற** - இம்முறையாக சத்து சித்துப் பொருள்களும் அசத்து அசித்துப் பொருள்களும் பொருந்தி விளங்கும்படியாக **மாறிலாது இருக்கும்** - மாறுபாடுகள் இல்லாது என்றும் நிலைபேறுடைய **தொல்லை ஒரு தனது** - பழமையான, ஒப்பு உவமையில்லாத **உருவம் காட்டி நிற்றலும்** - தனக்கே உரித்தான திருப்பெரு வடிவத்தினை காட்டிய வண்ணம் நிற்கவும் **உம்பர் கண்டார்** - தேவர்கள் அதனைக் காண்பாராயினர்.

**பொழிப்புரை :**

இயல்பாகவே அருள் பொழிகின்ற திருக்கண்களிலே ஞான சந்திரனும் ஞான சூரியனும் காதுகளில் திகாந்தரங்களும், அழகிய நெற்றியில் பொலிகின்ற பிரணவமும், சிரசினிடத்திலே பரமவான்மா வாகிய பரசிவமும் இம்முறையாக சத்து சித்துப் பொருள்களும் அசத்து அசித்துப் பொருள்களும் பொருந்தி விளங்கும்படியாக, மாறுபாடுகள் இல்லாத என்றும் நிலைபேறுடைய பழமையான ஒப்பு உவமை இல்லாத தனக்கே உரித்தான திருப்பெரு வடிவத்தினை பரமேசுவர - விசுவரூப - வடிவத்தினைக் காட்டிய வண்ணம் நிற்கவும் தேவர்கள் அதனைக் காண்பாராயினர்.

**செஞ்சுடர் அநந்த கோடி**
**செறிந்தொருங்கு உதித்த தென்ன**
**விஞ்சிய கதிர்கான் றுள்ள**
**வியன்பெரு வடிவை நோக்கி**
**நெஞ்சகம் துளங்கி விண்ணோர்**
**நின்றனர் நிமல மூர்த்தி**
**அஞ்சன்மின் அஞ்சன் மின்என்று**
**அருளினன் அமைந்த கையான்** (428)

பதவுரை :

**செஞ்சுடர் அநந்த கோடி செறிந்து ஒருங்கு உதித்தது என்ன** - அநந்த கோடி செஞ்ஞாயிறு ஒன்றாகச் சேர்ந்து ஒரு வடிவு கொண்டு உதித்த தென்னும்படியாக, **விஞ்சிய கதிர்கான்றுள்ள** - அவற்றினும் மேலாக உள்ள சூரியர்கள் கூடுவதால் எழும் ஒளிப் பிரபையினும் மிக்குத் தோன்றுகின்ற ஒளியை வீசுகின்ற **வியன்பெரு வடிவை நோக்கி** -வியக்கத்தக்க பேருருவத்தைக் கண்ணுற்றவர்களாகிய **நெஞ்சகம் துளங்கி விண்ணோர் நின்றனர்** - தேவர்கள் தமது நெஞ்சமானது நடுங்கி அச்சங் கொள்ளும்படி நின்றார்கள். **நிமலமூர்த்தி அஞ்சன்மின் அஞ்சன்மின் என்று** - அதனைக் கண்ணுற்று இயல்பாகவே பாசங்களின் நீங்கியவராகிய முருகப் பெருமான் "தேவர்களே, பயப்படாதீர், பயப்படாதீர்" எனக் கூறியவாறு **அருளினான் அமைந்த கையான்** - தனது அபயகரத்தை காட்டி அபயம் தந்து அருள்புரிந்தார்.

பொழிப்புரை :

அநந்தகோடி செஞ்ஞாயிறு ஒன்றாகச் சேர்ந்து ஒருவடிவு கொண்டு உதித்தது என்னும்படியாக, மேலாக உள்ள சூரியர்கள் கூடுவதால் எழும் ஒளிப்பிரபையினும் மிக்குத் தோன்றுகின்ற ஒளியை வீசுகின்ற வியக்கத் தக்க பேருருவத்தைக் கண்ணுற்றவர்களாகிய தேவர்கள் தமது நெஞ்சமானது நடுங்கி அச்சம் கொள்ளும்படி நின்றார்கள். அதனை கண்ணுற்று இயல்பாகவே பாசங்களின் நீங்கியவராகிய முருகப் பெருமான் "தேவர்களே, பயப்படாதீர், பயப்படாதீர்" எனக் கூறியவாறு தனது அபயகரத்தைக் காட்டி அபயம் தந்து அருள் புரிந்தார்.

**அண்டர்கள் யாரும் எந்தை**
**அருள்முறை வினவி உள்ளம்**
**உண்டிடு விதிர்ப்பு நீங்கி**
**உவகையால் தொழுது நின்றார்**

தண்துளி வரைய தென்னத்
தணப்பறச் சிதறும் ஊழிக்
கொண்டலின் தோற்றம் நோக்கிக்
குலவுறும் மஞ்ஞை யேபோல். (429)

பதவுரை :

**அண்டர்கள் யாரும் எந்தை அருள்முறை வினவி** - தேவர்கள் அனைவரும் எமது ஆன்ம நேயராகிய தந்தை முருகப் பெருமானின் அருள் வார்த்தையையும் அபயம் காட்டி அருள் புரிந்த ஆற்றினையும் கண்ணுற்று **உள்ளம் உண்டிடு விதிர்ப்பு நீங்கி** - தமது சிந்தையினை விழுங்கிய நடுக்கம் நீங்கப் பெற்றவராய் - தீர்ந்து **உவகையால் தொழுது நின்றார்** - மனதிலே எழுகின்ற மகிழ்ச்சியால், வணங்கி நின்றார். (அதற்கு உவமை கூறுவதாயின்) **தண்துளி வரையது என்ன** - குளிர்ந்த மழைநீர்த்துளிகளை மலைப் பிரமாணமாக **தணப்பு அறச் சிதறும்** - இடையீடு இன்றிப் பொழிகின்ற **ஊழிக் கொண்டலின் தோற்றம் நோக்கி** - ஊழிக் காலத்து வரும் மேகங்களின் வரவு கண்டு **குலவுறும் மஞ்ஞையே போல்** - மகிழ்ந்து கூத்தாடி களிப்படைகின்ற மயில்களைப் போல எனக் கூறலாம்.

பொழிப்புரை :

தேவர்கள் அனைவரும் எமது ஆன்ம நேயராகிய தந்தை முருகப் பெருமானின் அருள் வார்த்தையையும் அபயம் காட்டி அருள்புரிந்த ஆற்றினையும் - தன்மையினையும் - கண்ணுற்று, தமது சிந்தையினை விழுங்கிய நடுக்கம் நீங்கப் பெற்றவராய் - தீர்ந்து - மனதிலே எழுகின்ற மகிழ்ச்சியால் வணங்கி நின்றார். அதற்கு உவமை கூறுவதாயின் - குளிர்ந்த மழைநீர்த் துளிகளை மலைப் பிரமாணமாக இடையீடு இன்றிப் பொழிகின்ற ஊழிக் காலத்து வரும் மேகங்களின் வரவு கண்டு மகிழ்ந்து கூத்தாடி களிப்படைகின்ற மயில்களைப் போல எனக் கூறலாம்.

இறுதியும் முதலும் இல்லா
இப்பெரும் வடிவம் தன்னைக்
கறைவிடம் உறழும் சூரன்
கண்டுவிம் மிதத்தில் நிற்ப
அறிவரும் உணர்தல் தேற்றா
ஆறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் உணர்ச்சி நல்க
இனையன செப்பல் உற்றான். (430)

பதவுரை :

**இறுதியும் முதலும் இல்லா** - தொடக்கமும் முடிவும் காணமுடியாத **இப்பெரும் வடிவம் தன்னை** - இந்தப் பேருரு அதனை **கறைவிடம் உறழும் சூரன் கண்டு** - கரிய நஞ்சை ஒத்தவனாகிய சூரபதுமன் கண்டு **விம்மிதத்தில் நிற்ப** - ஆச்சரியமும் அதிசயமும் கொண்டு மூழ்குகின்ற நிலையில் நிற்கவும், **அறிவரும் உணர்தல் தேற்றா** - அத்தோடு அவ்வடிவத்தை கண்ணுற்று அறிவதற்கான ஞான உணர்வுகள் இல்லாத தன்மையை அறியப் பெற்றவராகி **ஆறுமுகத்து வள்ளல் சிறிது நல்உணர்ச்சி நல்க** - அருள் வள்ளலாகிய ஆறுமுகப் பெருமான் அச்சூரபன்மனுக்குச் சிறிதளவு ஞான உணர்வினைக் கொடுத்து அருளவும், **இனையன செப்பல் உற்றான்** - அதனால் ஞான உணர்வு பெற்று அதன் வழிப்பட்டு நின்று பின்வருமாறு தன்னோடும் பேசுவானாயினான்.

பொழிப்புரை :

தொடக்கமும் முடிவும் காணமுடியாத இந்தப் பேருரு அதனை கரிய நஞ்சை ஒத்தவனாகிய சூரபதுமன் கண்டு ஆச்சரியமும் அதிசயமும் கொண்டு மூழ்குகின்ற நிலையில் நிற்கவும், அத்தோடு அவ்வடிவத்தைக் கண்ணுற்று அறிவதற்கான ஞான உணர்வுகள் இல்லாத தன்மையை அறியப் பெற்றவராகி அருள் வள்ளல் ஆகிய ஆறுமுகப் பெருமான் அச் சூரபதுமனுக்குச் சிறிதளவு ஞான

உணர்வினைக் கொடுத்து அருளவும், அதனால் ஞான உணர்வு பெற்று அதன் வழிப்பட்டுப் பின்வருமாறு தன்னோடும் பேசுவானாயினான்.

**எண்இலா அவுணர் தானை**
**யாவையும் இமைப்பில் செற்று**
**விண்உலா அண்டம் தோறும்**
**வியன்சமர் ஆற்றி என்பால்**
**நண்ணினார் தம்மை எல்லாம்**
**நாம்அறத் தடிந்து வீட்டி**
**வண்ணமான் தேரும் மீண்டு**
**வராநெறி தடுத்தான் மன்னோ.** (431)

பதவுரை :

**எண்இலா அவுணர்தானை யாவையும் இமைப்பில் செற்று** - எனது அளவு இல்லாத அவுணர் படைகள் யாவற்றையும் ஒரு இமைப் பொழுதில் இல்லையாம்படி அழித்து. **விண்உலா அண்டம் தோறும்** - ஆகாயத்திலே சஞ்சரிக்கின்ற - தங்கிய - பல அண்டங்கள் தோறும் யான் செல்லச் செல்ல அங்கங்கெல்லாம் எனைத் தொடர்ந்து வந்து **வியன்சமர் ஆற்றி** - வியக்கத்தக்க நெருங்கிய போரைச் செய்து **என்பால் நண்ணினார் தம்மை எல்லாம்** - எனது பக்கத் துணைவராகிய சகோதரர் புத்திரர் முதலிய சுற்றத்தவர் யாவரையும் **நாம் அறத் தடிந்து வீட்டி** - அவர்கள் பெயர்களும் இல்லயாம்படி (அழித்து) சங்கரித்துக் கொன்று (நாம் - நாமம் - பெயர்) **வண்ணமான் தேரும்** - எனது அழகிய இந்திரஞாலத் தேரினையும் **மீண்டு வராநெறி தடுத்தான் மன்னோ** - என்னிடம் மீண்டும் வராத வண்ணம் தடுத்துவிட்டான். இது ஒரு திப்பியமே, அதிசயமே.

பொழிப்புரை :

எனது அளவு இல்லாத அவுணர் படைகள் யாவற்றையும் ஒரு இமைப்பொழுதில் இல்லையாம்படி அழித்து, ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற (உலவி நிற்கும் - தங்கிய) பல அண்டங்கள் தோறும்

யான் செல்லச் செல்லச் அங்கங்கெல்லாம் என்னைத் தொடர்ந்து வந்து வியக்கத்தக்க நெருங்கிய போரைச் செய்து, எனது பக்கத் துணைவராகிய சகோதரர், புத்திரர் முதலிய சுற்றத்தவர் யாவரையும் அவர்கள் பெயர்களும் இல்லையாம்படி (அழித்து) சங்கரித்துக் கொன்று, எனது அழகிய இந்திர ஞாலத் தேரினையும் என்னிடம் மீண்டும் வராத வண்ணம் தடுத்து விட்டான். இது ஒரு திப்பியமே, அதிசயமே, வியப்பே!

**திண்திறல் உடையேன் தூண்டும்**
**திறல்படை யாவும் நீக்கி**
**கொண்ட என்மாயம் முற்றும்**
**கொடும்சரம் அதனால் மாற்றி**
**அண்டமும் புவனம் யாவும்**
**அமரரும் பிறவும் தன்பால்**
**கண்டிடும் வடிவம் ஒன்று**
**காட்டிஎன் கண்முன் நின்றான்.** (432)

பதவுரை :

**திண்திறல் உடையேன்** - திண்ணிய பெருவலிமையில் மேம்பட்டவ னாகிய யான் **தூண்டும் திறல் படை யாவும் நீக்கி** - ஏவிய ஆற்றல் மிக்க படைக்கலங்கள் யாவற்றையும் அபகரித்தும் அகற்றியும் மாற்றியும் **கொண்ட என் மாயம் முற்றும்** - நான் மேற்கொண்ட எவ்வகைத்தான மாய வடிவங்கள் எல்லாவற்றையும் **கொடும்சரம் அதனால் மாற்றி** - கொடிய கூரிய பாணங்களினால் அழித்து நீக்கியும் **அண்டமும் புவனம் யாவும்** - பிரபஞ்சத்திலுள்ள ஆயிர கோடிக்கணக்கான அண்டத் தொகுதிகளையும் புவனங் களையும் மற்றுமுள இயங்காப் பொருள்களையும், **அமரரும் பிறவும் தன்பால் கண்டிடும் வடிவம் ஒன்று காட்டி** - தேவர், வித்தியாதரர், முனிவர் முதலிய நிலைபேறுடைய உயிர்த் தொகுதிகளையும் தனது ஒப்பற்ற திருமேனியில் அமைந்திருக்கும் திறம் காட்டிய வண்ணம் **என் கண்முன் நின்றான்** - என் எதிரில் யான் காணும்படியாக நின்றருளினார்.

பொழிப்புரை :

திண்ணிய - உறுதிப்பெற்ற பெரு வலிமையில் மேம்பட்டவனாகிய யான் ஏவிய ஆற்றல் மிக்க படைக்கலங்கள் யாவற்றையும் அபகரித்தும் அகற்றியும் அழித்தும் மாற்றியும், நான் மேற்கொண்ட மாய வடிவங்கள் எல்லாவற்றையும் கொடிய கூரிய பாணங்களினால் அழித்து நீக்கியும், பிரபஞ்சத்திலுள்ள ஆயிர கோடிக்கணக்கான அண்டத் தொகுதி களையும் புவனங்களையும், மற்றுமுள்ள இயங்காப் பொருள்களையும், தேவர், வித்தியாதரர், முனிவர் முதலிய நிலைபேறுடைய உயிர்த் தொகுதிகளையும் தனது ஒப்பற்ற திருமேனியில் அமைந்திருக்கும் திறம் காட்டிய வண்ணம் என் எதிரில் யான் காணும்படியாக நின்றருளினார்.

**கோலமா மஞ்ஞை தன்னில்**
**குலவிய குமரன் தன்னைப்**
**பாலன்என்று இருந்தேன் அந்நாள்**
**பரிசுஇவை உணர்ந்தி லேன்யான்**
**மால்அயன் தனக்கும் ஏனை**
**வானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகா ரணமாய் நின்ற**
**மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ.** (433)

பதவுரை :

**கோலமா மஞ்ஞை தன்னில்** - அழகும் மகிமையும் நிரம்பிய மயில் வாகனத்தின் மீது ஆரோகணித்து **குலவிய குமரன் தன்னைப்** - உலாவி வருகின்ற குமரப் பெருமானை **பாலன் என்று இருந்தேன்** - ஒரு சிறு பாலகன் தானே இவன் என்று எண்ணிக் கொண்டேன் **அந்நாள் பரிசு இவை உணர்ந்திலேன் யான்** - கடந்து போன காலத்தில், இப்போது காண்கின்ற இப்பரமேசுவர மூர்த்தியே மூல மூர்த்தியாகிய சிவ பரம்பொருள் என்பதை யான் என் அறியாமை யால் உணராதிருந்து விட்டேன். **மால் அயன் தனக்கும் ஏனை**

**வானவர் தமக்கும் யார்க்கும்** - திருமால் பிரமதேவர்களுக்கும், இவர்களல்லாத மற்றைய அதிதேவர்களுக்கும் அமரர்களுக்கும் உயிர்களுக்கும் **மூல காரணமாய் நின்ற மூர்த்தி** - நிமித்த காரணனாக நின்ற பெரும் பரமசிவ மூர்த்தியாக விளங்கும் **இம்மூர்த்தி அன்றோ** - முதல்வர் இந்த முருகக் கடவுள் என்பதை உணர்ந்து விட்டேன்.

பொழிப்புரை :

அழகும் மகிமையும் நிரம்பிய மயில்வாகனத்தின் மீது ஆரோகணித்து உலாவி வருகின்ற குமரப் பெருமானை ஒரு சிறு பாலகன் தானே இவன் என்று எண்ணிக் கொண்டேன். கடந்து போன காலத்தில், இப்போது காணுகின்ற இப்பரமேசுவர மூர்த்தியே மூல மூர்த்தியாகிய பரம்பொருள் என்பதை யான், என் அறியாமையால் உணராதிருந்து விட்டேன். திருமால், பிரம தேவர்களுக்கும் இவர்களல்லாத மற்றைய அதி தேவர்களுக்கும் அமரர்களுக்கும் உயிர்களுக்கும் நிமித்த காரணனாக நின்ற பெரும் பரமசிவ மூர்த்தியாக விளங்கும் முதல்வர் இந்த முருகக் கடவுள் என்பதை உணர்ந்து விட்டேன்.

**ஒற்றென முன்னம் வந்தோன்**
**ஒருதனி வேலோன் தன்னை**
**பற்றுஇகல் இன்றி நின்ற**
**பராபர முதல்வன் என்றே**
**சொற்றனன் சொற்ற எல்லாம்**
**துணிபுஎனக் கொண்டி லேனால்**
**இற்றை இப்பொழுதில் ஈசன்**
**இவன்எனும் தன்மை கண்டேன்.** (434)

பதவுரை :

**ஒற்றுஎன முன்னம் வந்தோன்** - முன்பு ஒருவேளையில் எனது அரச மண்டபத்தில் முருகப் பெருமானின் தூதுவன் நான் என வந்தவராகிய வீரவாகுதேவர், **ஒருதனி வேலோன் தன்னை** -

ஒப்பற்ற தனித்த வேற்படையை கொண்டவராகிய சண்முகப் பெருமான் இயல்பு கூறும்போது **பற்றுஇகல் இன்றி நின்ற பராபர முதல்வன் என்றே சொற்றனன்** - விருப்பும் வெறுப்பும் இல்லாத் தன்மையராகிய பரமசிவனாகிய எமது தலைவரென்றே இடித்துச் சொன்னார். **சொற்றவெல்லாம் துணிபெனக் கொண்டிலேனால்** - அவ்வாறு எடுத்துச் சொல்லிய உண்மை வார்த்தைகள் யாவற்றையும் துணிபான உண்மை வார்த்தைகளெனக் கொள்ளவில்லை (பழித் துரைத்தேன்). **இற்றை இப்பொழுதில்** - இன்றைய தினத்தில் இந்த வேளையில் **ஈசன் இவன் எனும் தன்மை கண்டேன்** - இச்சிவகுமாரனாகிய முருகப் பெருமானே பரமசிவமூர்த்தி என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.

பொழிப்புரை :

முன்பு ஒரு வேளையில் எனது அரச மண்டபத்தில் முருகப் பெருமானின் தூதுவன் யான் என வந்தவராகிய வீரவாகுதேவர் ஒப்பற்ற தனித்த வேற்படையை தாங்கிக் கொண்டவராகிய சண்முகப் பெருமான் இயல்பு கூறும்போது விருப்பும் வெறுப்பும் இல்லாத் தன்மையராகிய பரமசிவனாகிய எமது தலைவரென்றே இடித்துச் சொன்னார். அவ்வாறு எடுத்துச் சொல்லிய உண்மை வார்த்தைகள் யாவற்றையும் துணிபான உண்மை வார்த்தைகளெனக் கொள்ள வில்லை (பழித்துரைத்தேன்). இன்றைய தினத்தில் இந்த வேளையில் இச்சிவகுமாரனாகிய முருகப்பெருமானே பரமசிவமூர்த்தி என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.

மீயுயர் வடிவங் கொண்டு
மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா
மற்றுயான் பெற்ற அண்டம்
ஆயவை முழுதும் மற்றும்
அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்தில்
தோன்றியே நிற்கும் அன்றே. (435)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



பதவுரை :

**மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன்** - மிக்குயர்ந்த பெரிய வடிவத்தை மேற்கொண்டு என் முன்னே தூதுவனாக வந்த வீரவாகுதேவர் **சொற்ற வாய்மைகள் சரதம்** - அப்போது முருகப் பெருமானின் பேரருட் திறன்களையும் சிறப்பு இயல்புகளையும் எடுத்துக்கூறிய வார்த்தைகள் யாவும் உண்மையானவையே. **அம்மா** - அதில் சந்தேகமில்லை உண்மை உண்மையே **மற்றுயான் பெற்ற அண்டம் ஆயவை முழுதும்** - ஏனெனில் எனது ஆட்சிக்குட்பட்டு நிற்பனவாகிய ஆயிரத்தெட்டு அண்டங்களும், அதற்கப்பாலும் விளங்கித் தோன்றும் ஆயிரகோடி அண்டங்களும் பிறவும் யாவும் **ஆறுமுகம் படைத்த செம்மல்** - ஆறுமுகம் கொண்டிருப்பவராகிய பகவனது **தூய பொற்பத உரோமத்தில் தோன்றியே நிற்கும் அன்றே** - பரிசுத்தமான அழகிய மாணடியில் விளங்கித் தோன்றும் ஒரு உரோமத்தினிலே தோற்றம் தந்து நிற்கின்றதல்லவா.

பொழிப்புரை :

மிக்கு உயர்ந்த பெரிய வடிவத்தை மேற்கொண்டு என் முன்னே தூதுவனாக வந்த வீரவாகு தேவர் அப்போது முருகப் பெருமானின் பேரருட் திறன்களையும் சிறப்பு இயல்புகளையும் எடுத்துக்கூறிய வார்த்தைகள் யாவும் உண்மையானவையே. அதில் சந்தேகமில்லை. உண்மை உண்மையே. ஏனெனில், எனது ஆட்சிக்குட்பட்டு நிற்பன வாகிய ஆயிரத்தெட்டு அண்டங்களும் அதற்கப்பாலும் விளங்கித் தோன்றும் ஆயிரகோடி அண்டங்களும் பிறவும் யாவும், ஆறு திருமுகங்களைக் கொண்டிருப்பவராகிய பகவனது பரிசுத்தமான அழகிய மாணடியில் விளங்கித் தோன்றும் ஒரு உரோமத்தினிலே தோற்றம் தந்து நிற்கின்றதல்லவா.

**அண்டர்கள் முனிவர் ஏனோர்**
**அகிலமும் காட்டி அண்ணல்**
**கொண்டிடு படிவம் முற்றும்**
**குறித்துயார் தெரிதற் பாலார்**

எண்தரு விழிகள் யாக்கை
எங்கணும் படைத்தோர்க் கேனும்
கண்டிட அநந்த கோடி
கற்பமும் கடக்கும் அன்றே. (436)

பதவுரை :

**அண்டர்கள் முனிவர் ஏனோர்** - தேவர்களையும் முனிவர்களையும் ஏனையோரையும் **அகிலமும் காட்டி** - மற்றும் உள்ள சடசித்துப் பிரபஞ்சங்களையும் காட்சி தரும்படியாக **அண்ணல் கொண்டிடும் படிவம் முற்றும்** - பெருமையில் மிக்கவராகிய சண்முகப் பெருமான் கொண்டிருக்கும் இந்தப் பரமேசுவர வடிவம் முழுவதையும் **குறித்துயார் தெரிதற் பாலார்** - இத்தன்மைத்து இவ்வண்ணத்து என சுட்டியறிந்து கொள்ளக் கூடிய வல்லவர் யாவர். ஒருவருமில்லை. (இறைவன் சுட்டி அறியப்படாதவன்). **எண்தரும் விழிகள் யாக்கை எங்கணும் படைத்தோர்க்கேனும்** - தமது உடல்கள் எங்கணும் கண்களாகவே கொண்டிருப்பவர் ஒருவருக்குத் தானும் **கண்டிட** - எம் தலைவராகிய முருகப் பெருமானின் பேருரு அதனை கண்டு தெளிவதற்கு **அநந்த கோடி கற்பமும் கடக்கும் அன்றே** - அநந்த கோடி கற்பாந்த காலமும், அதற்கு அப்பாலும் ஆய காலங்கள் வேண்டுமன்றோ. (அதனைக் கண்டு முடிவு காண முடியாது என்றவாறு).

பொழிப்புரை :

தேவர்களையும் முனிவர்களையும் ஏனையோர்களையும் சடசித்துப் பிரபஞ்சங்களையும் காட்சி தரும்படியாக, பெருமையில் மிக்கவராகிய சண்முகப் பெருமான் கொண்டிருக்கும் இந்தப் பரமேசுவர வடிவம் முழுவதையும் இத்தன்மைத்து, இவ்வண்ணத்து எனச் சுட்டியறிந்து கொள்ளக்கூடிய வல்லவர் யாவர். ஒருவருமில்லை (இறைவன் சுட்டி அறியப்படாதவன்) தமது உடல்கள் எங்கணும் கண்களாகவே கொண்டிருப்பவர் ஒருவருக்குத் தானும் எம் தலைவராகிய முருகப் பெருமானின் பேருரு அதனைக் கண்டு தெளிவதற்கு அநந்தகோடி

கற்பாந்த காலமும் அதற்கு அப்பாலும் ஆய காலங்கள் வேண்டுமன்றோ (அதனைக் கண்டு முடிவு காண முடியாது).

**சீர்க்கும ரேசன் கொண்ட**
**திருப்பெரும் வடிவம் தன்னில்**
**ஏர்க்குறும் ஒளியும் சீரும்**
**இளமையும் எழிலும் எல்லாம்**
**ஆர்க்குள உலகில் அம்மா**
**அற்புதத் தோடும் பல்கால்**
**பார்க்கினும் தெவிட்டிற் றில்லை**
**இன்னும்என் பார்வை தானும்** (437)

பதவுரை :

**சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெரு(ம்) வடிவைந் தன்னில்** - சிறப்புகள் பல திகழும் குமரவேட் பெருமான் கொண்ட தெய்வீகமான இந்தப் பெரிய திருமேனி வடிவத்தினில் **ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்** - வனப்பு மிக்க ஒளியும், செல்வப் புகழும் இளமையும் அழகும் ஆகிய இவை அனைத்தும் **ஆர்க்குள உலகில் அம்மா** - இந்த உலகில் உள்ள தெய்வங்களில் யாருக்குத்தான் உண்டு. ஒருவருக்குமில்லை அம்மா இது ஒரு அதிசயமே. **அற்புதத் தோடும் பல்கால் பார்க்கினும்** - நான் அதிசயத்தோடு பலமுறை பார்த்துப் பார்த்து நின்றாலும் **தெவிட்டிலை இன்னும் என்பார்வை தானும்** - இது போதும் போதும் என்று நான் எண்ணிக் கொண்டாலும் எனது கண்கள் மீண்டும் மீண்டும் கண்டு (பார்த்து) அதிசயிக் கின்றனவே. இது ஒரு திருப்தி அடையாத நிலையன்றோ.

பொழிப்புரை :

சிறப்புகள் பல திகழும் குமரவேட் பெருமான் கொண்ட தெய்வீகமான இந்தப் பெரிய திருமேனி வடிவத்தினில் வனப்பு மிக்க

ஒளியும் செல்வப் புகழும் இளமையும் அழகும் ஆகிய இவை அனைத்தும், இந்த உலகில் உள்ள தெய்வங்களில் யாருக்குத்தான் உண்டு ஒருவருக்குமில்லை. அம்மா இது ஒரு அதிசயமே. நான் அதிசயத்தோடு பலமுறை பார்த்துப் பார்த்து நின்றாலும் இது போதும் போதும் என்று நான் எண்ணிக் கொண்டாலும் எனது கண்கள் மீண்டும் மீண்டும் கண்டு (பார்த்து) அதிசயிக்கின்றனவே. இது ஒரு திருப்தி அடையாத நிலையன்றோ.

நேர்இலன் ஆகி ஈண்டே
நின்றிடும் முதல்வன் நீடும்
பேர்உரு அதனை நோக்கிப்
பெரிதும்அச் சுறுவ தல்லால்
ஆர்இது நின்று காண்பர்
அமரரில் அழிவி லாத
சீரிய வரங்கொண் டுள்ளேன்
ஆதலில் தெரிகி லேனால். (438)

பதவுரை :

**நேர்இலன் ஆகி ஈண்டே நின்றிடும் முதல்வன்** - இப் போர்க் களத்திலே இணை என்று எவரும் இல்லையாம்படியாகக் காட்சித் தருகின்ற தலைவராம் முருகப்பெருமானின் **நீடும்பேர் உரு அதனை நோக்கிப்** - உயர்ச்சிமிக்க பெரிய திருமேனியைப் பார்த்த வேளையில் **பெரிதும் அச்சுறுவ தல்லால்** - பெரிதாக அச்சம் கொள்ளுவதே அல்லாமல் **ஆர்இது நின்று காண்பர் அமரரில்** - தேவர் கூட்டத்தினுள் யார் தான் எதிர்நின்று காண்பதற்கு வல்லவர். ஒருவருமில்லை. **அழிவிலாத சீரிய வரங் கொண்டுள்ளேன்** - என்றும் அழிதலில்லாத மேன்மை மிகு வரத்தினை நான் பெற்றுக் கொண்டேன். **ஆகையால்** - ஆன காரணத்தால் **தெரிகின்றேனால்** - அவ்வடிவத்தை அஞ்சாது எதிர் நின்று காணுகின்றேன் அன்றோ.

பொழிப்புரை :

இப்போர்க்களத்திலே இணை என்று எவரும் இல்லையாம்படியாகக் காட்சி தருகின்ற தலைவராம் முருகப் பெருமானின் உயர்ச்சிமிக்க பெரிய திருமேனியைப் பார்த்த வேளையில் பெரிதாக் அச்சம் கொள்ளுவதே அல்லாமல் தேவர் கூட்டத்தினுள் யார் தான் எதிர் நின்று காண்பதற்கு வல்லவர் ஒருவருமில்லை. என்றும் அழிதலில்லாத மேன்மைமிகு வரத்தினை நான் பெற்றுக் கொண்டேன். ஆன காரணத்தினால், அவ் வடிவத்தை அஞ்சாது எதிர்நின்று காணுகின்றேன் அன்றோ.

ஆயிர கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது
என்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற்(கு) எல்லாம்
உவமையார் வகுக்க வல்லார். (439)

பதவுரை :

**ஆயிரகோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாகி** - அழகில் மிக்கு விளங்குபவர்களான ஆயிர கோடி எண்ணிக்கை கொண்ட மன்மதர், தமது அழகுகள் யாவும் ஒருங்கு சேர்ந்து **மேயின எனினும்** - ஒரு பேரழகான வடிவம் எடுத்துத் தோற்றம் கொண்டு வருவார்களாயினும் **செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்** - சிவந்த திருமேனி வண்ணம் கொண்ட முருகப் பெருமானின் நிருமலமான திருவடிகளில் தோன்றும் **தூயநல் எழிலுக்கு ஆற்றாது** - தூய்மைமிக்க அழகுக்கு ஈடாக மாட்டார்கள். எதிர்நிற்க வல்லவரும் அல்லர். **என்றிடில்** - இது உண்மையான வார்த்தைகளே. அவ்வாறாயின் **இனைய தொல்லோன்** - இங்குத் தோற்றம் தரும் பழையோனான செவ்வேள் பெருமானின் **மாயிரு வடிவுக் கெல்லாம்**

- மாண்புமிக்க பேருருவத்திற்கு இணை இதுவேதான் **உவமை யார் வகுக்க வல்லார்** - உவமை என (எடுத்துக்காட்டை) வகுக்க வல்லவர்கள் யார்தான் உள்ளனரோ.

பொழிப்புரை :

அழகில் மிக்கு விளங்குபவர்களான ஆயிர கோடி எண்ணிக்கை கொண்ட மன்மதர், தமது அழகுகள் யாவும் ஒருங்கு சேர்ந்து ஒரு பேரழகான வடிவம் எடுத்துத் தோற்றம் கொண்டு வருவார்களாயினும் சிவந்த திருமேனி வண்ணம் கொண்ட முருகப் பெருமானின் நிருமலமான திருவடிகளில் தோன்றும் தூய்மை மிக்க அழகுக்கு ஈடாக மாட்டார்கள். எதிர் நிற்க வல்லவரும் அல்லர். இது உண்மையான வார்த்தைகளே. அவ்வாறாயின், இங்குத் தோற்றம் தரும் பழையோனான செவ்வேள் பெருமானின் மாண்புமிக்க பேருருவத் திற்கு இணை இதுவேதான் உவமை என (எடுத்துக்காட்டை) வகுக்க வல்லவர்கள் யார் தான் உள்ளனரோ - இல்லை என்றவாறு.

**இங்கெனது உயிர்போல் உற்ற**
**இளவலும் இளைய சேயும்**
**செங்கையில் வேலோன் தன்னை**
**சிறுவன் என்றுஎண்ணல் கண்டாய்**
**பங்கயன் முதலோர் காணாப்**
**பரமனே யாகும் என்றார்**
**அங்கவர் மொழிந்த வாறும்**
**சரதமே ஆன தன்றே.** (440)

பதவுரை :

**இங்கெனது உயிர்போல் உற்ற இளவலும்** - இவ்வுலகத்திலே எனது உயிர்போல இனிமை செய்துகொண்டிருந்த எனது தம்பி சிங்கமுகாசுரனும் **இளைய சேயும்** - இளமை பொருந்திய எனது கடைசி மைந்தன் இரணியனும் **செங்கையில் வேலோன் தன்னைச்**

- சிவந்த திருக்கரத்திலே வேலாயுதத்தைக் கொண்டு விளங்கும் குமரவேள் பெருமானை **சிறுவன் என்று எண்ணல் கண்டாய்** - சிறுவன் போன்ற தோற்றம் கொண்டுள்ளரே என எண்ணிவிடாதே. **பங்கயன் முதலோர் காணாப்** - தாமரைமலர் வாசராகிய பிரமதேவனை முதலாக உடைய தேவர்கள் எவராலும் தேடியும் கண்டு அறிந்து கொள்ள முடியாத **பரமனே ஆகும் என்றார்** - பரமசிவனே இவர் ஆவர் என இடித்துக் கூறினார்கள். **அங்கவர் மொழிந்தவாறும்** - இன்று பார்க்கும் போது அன்றைக்கு அவர்கள் இருவரும் எடுத்துக் கூறிய வார்த்தைகள் யாவும் **சரதமே ஆன தன்றே** - உண்மையானவை என தெளிந்து கொண்டேன் அன்றோ.

பொழிப்புரை :

இவ்வுலகத்திலே எனது உயிர்போல இனிமை (துணை) செய்து கொண்டிருந்த எனது தம்பி சிங்கமுகாசுரனும் இளமை பொருந்திய எனது கடைசி மைந்தன் இரணியனும் சிவந்த திருக்கரத்திலே வேலாயுதத்தைக் கொண்டு விளங்கும் குமரவேள் பெருமானை சிறுவன் போன்ற தோற்றம் கொண்டுள்ளாரே என எண்ணிவிடாதே. தாமரை மலர் வாசராகிய பிரமதேவனை முதலாகவுடைய தேவர்கள் எவராலும் தேடியும் கண்டு அறிந்து கொள்ள முடியாத பரமசிவனே இவர் ஆவர் என இடித்துக் கூறினார்கள். இன்று பார்க்கும்போது அன்றைக்கு அவர்கள் இருவரும் எடுத்துக்கூறிய வார்த்தைகள் யாவும் உண்மையானவை எனத் தெளிந்து கொண்டேன் அன்றோ.

**அண்ணலார் குமரன் மேனி**
**அடிமுதல் முடியின் காறும்**
**எண்ணிலா ஊழி காலம்**
**எத்திறம் நோக்கி னாலும்**
**கண்ணினால் அடங்காது உன்னில்**
**கருத்தினால் அடங்காது என்பால்**
**நண்ணினான் அமருக் கென்கை**
**அருளென நாட்ட லாமே.** (441)

பதவுரை :

**அண்ணல் ஆர்குமரன் மேனி** - இறைத் தன்மையில் பெருமையில் சிறப்புமிக்க குமரவேள் பெருமான் கொண்டிருக்கும் இந்த திருமேனியின் அழகினை **அடிமுதல் முடியின் காறும்** - அடி ஆதி முடி அந்தமாகக் கொண்டு **எண்ணிலா ஊழி காலம்** - எண்ணற்ற பல்லூழி காலம் வரை **எத்திறம் நோக்கினாலும்** - எத்தகைய தன்மையோடும் ஆற்றலோடும் பார்த்தாலும் **கண்ணினால் அடங்காது** - எனது விழிகளால் காட்சிக்கு எட்டிய அளவில் பார்க்க முயல்வேன் ஆயினும், அக்காட்சியின் எல்லைக்குள் அவரது திருமேனியின் வடிவத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. **உன்னில் கருத்தினால் அடங்காது** - எனது கண்களை மூடிய வண்ணம் எனது சிந்தையினாலே கருதி அக்காட்சியை மனதிற்குள் அடக்கிக் கொள்வேன் என முயற்சிப்பேன் ஆயினும் நான் கருதிக்கொண்ட கருத்துகளுக்குள் தானும் அவரை அடக்கிக் கொள்ள முடியவில்லை. **என்பால் நண்ணினான் அமருக்கு என்கை** - இத்தகு பேருருவம் உடைய பெருமான் என்னுடன் போர் புரிவதற்கு எண்ணி இவ்விடத்து எழுந்தருளி வந்தார் என்பது (பகைமையால் வந்தது அல்ல). **அருள் என நாட்டலாமே** - அப்பெருமான் என்மீது கொண்ட (மறக்கருணைத் திறம்) பேரருளுடைமை என்றே சொல்லலாம் அன்றோ.

பொழிப்புரை :

இறைத்தன்மையில் பெருமையில் சிறப்புமிக்க குமரவேள் பெருமான் கொண்டிருக்கும் இந்தத் திருமேனியின் அழகினை அடி ஆதி, முடி அந்தமாகவும் கொண்டு எண்ணற்ற பல்லூழி காலம் வரை எத்தகைய தன்மையோடும் ஆற்றலோடும் பார்த்தாலும் எனது விழிகளால் காட்சிக்கு எட்டிய வரையில் பார்க்க முயல்வேன் ஆயினும் அக்காட்சியின் எல்லைக்குள் அவரது திருமேனியின் வடிவத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. எனது கண்களை மூடிக்கொண்டு எனது சிந்தையினாலே கருதி அக்காட்சியை மனதிற்குள் அடக்கிக் கொள்வேன் என முயற்சிப்பேனாயினும் நான்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



கருதிக் கொண்ட கருத்துக்குள் தானும் அவரை அடக்கிக் கொள்ள முடியவில்லை. இத்தகு பேருருவம் உடைய பெருமான் என்னுடன் போர் புரிவதற்கு எண்ணி இவ்விடத்து எழுந்தருளி வந்தார் என்பது (பகைமையால் வந்தது அல்ல) அப்பெருமான் என்மீது கொண்ட (மறக்கருணைத்திறம்) பேரருளுடைமை என்றே சொல்லலாம் அன்றோ.

திருகிய வெகுளி முற்றும்
   தீர்ந்தன செருவின் ஊக்கம்
அருகியது உரோமம் புள்ளி
   ஆயின விழியில் தூநீர்
பெருகியது இவன்பால் அன்பு
   பிறந்தன தமியேற்கு உள்ளம்
உருகியது என்பு தானும்
   உலைமெழு காகும் அன்றே. (442)

13820

பதவுரை :

**திருகிய வெகுளி முற்றும் தீர்ந்தன** - மாறுபாடு கொண்டு எழுந்த எனது முதிர்ந்த கோபம் எல்லாம் அழிந்துவிட்டன. **செருவின் ஊக்கம் அருகியது** - மீண்டும் போர் செய்ய வேண்டும் என வரும் ஊக்கம் மனக்கிளர்ச்சி குறைந்துவிட்டது. **உரோமம் புள்ளி ஆயின** - உரோமங்கள் சிலிர்த்துக் குத்திட்டு நிற்கின்றன. **விழியில் தூநீர் பெருகியது** - இருகண்களில் இருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது **இவன்பால் அன்பு பிறந்தன** - இங்குள்ள இறைத் தன்மை கொண்ட பெருமான் மீது அன்புப் பெருக்கு நிறைகின்றன. **தமியேற்கு உள்ளம் உருகியது** - என்னுடைய மனமும் உருகிக் கொள்கின்றது. **என்பு தானும் உலைமெழுகு ஆகும் அன்றே** - வன்மை மிக்க எனது எலும்புகள் யாவும் உலையிலே இட்ட மெழுகு போல நெக்கு நெக்காக உருகி (விட்டன)க் கொள்ளுகின்றனவே.

பொழிப்புரை :

மாறுபாடு கொண்டு எழுந்த எனது முதிர்ந்த கோபம் எல்லாம் அழிந்துவிட்டன. மீண்டும் போர் செய்ய வேண்டும் என வரும் ஊக்கம் (உற்சாகம்) மனக்கிளர்ச்சி குறைந்து விட்டது. உரோமங்கள் சிலிர்த்துக் குத்திட்டு நிற்கின்றன. இரு கண்களில் இருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது. இங்குள்ள இறைத்தன்மை கொண்ட பெருமான் மீது அன்புப் பெருக்கு நிறைகின்றன. என்னுடைய மனமும் உருகிக் கொள்ளுகின்றது. வன்மை மிக்க எனது எலும்புகள் யாவும் உலை யிலே இட்ட மெழுகுபோல நெக்கு நெக்காக உருகிக் கொள்கின்றனவே.

**போயின அகந்தை போதம்**
**புகுந்தன வலத்த தான**
**தூயதோர் தோளும் கண்ணும்**
**துடித்தன புவனம் எங்கும்**
**மேயின பொருள்கள் முற்றும்**
**வெளிப்படு கின்ற விண்ணோர்**
**நாயகன் வடிவம் கண்டேன்**
**நற்தவப் பயன்ஈ தன்றோ.** (443)

பதவுரை :

**போயின அகந்தை** - இத்துணை காலமும் என்னைப் பிணித்திருந்த செருக்குப் போய்விட்டது. **போதம் புகுந்தன** - சிவஞான அறிவு என்னுள் தலைப்பட்டு புகுந்து கொண்டது. **வலத்ததான தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன** - முருகனின் அருட்பார்வை பெற்ற காரணத்தினால் தூய்மை பெற்றுள்ள வலது தோளும் வலது கண்ணும் எனக்கு நன்மை விளையப் போகின்றது என்பதற்கு அடையாளமாகத் துடித்தன. **புவனம் எங்கும் மேயின**

**பொருள்கள் முற்றும் வெளிப்படுகின்ற** - சிவஞானம் புகுந்த காரணத்தால் பசுத்துவ நிலையில் நின்று அகன்ற யான், நான் யார் என்பதையும் உலகப் பொருள்கள் யாவும் பொய்ப் பொருள்கள் என்பதையும் உணரப் பெறுகிறேன். **விண்ணோர் நாயகன் வடிவம் கண்டேன்** - இவ்வாறறிவதாகிய பதியறிவு கைவரப் பெற்றதோடு அதனைக் காணும் உபகாரமாகக் காட்டி நிற்கும் தேவர்க்கும் தலைப்பாடுடைய இறைவனின் உண்மைத் தன்மையையும் மெய்ப்பொருள் அறிவையும், அப்பெருமா னின் அழகுத் திருமேனி வடிவத்தையும் கண்டு கொண்டேன். **நற்றவப் பயன் ஈதன்றோ** - இவை யாவும் யான் எடுத்துக் கொண்ட முந்திய பிறவிகளிலும் இந்தப் பிறவியிலும் பெற்றுக் கொண்ட நற்றவப்பயன் என்பதையும் உணர்ந்து கொண்டேன் அன்றோ.

(அகந்தை அகல்வது என்பது அஞ்ஞானம் அகல்வதும் போதம் புகுந்த தென்பது இறைவன் தோன்றி அருளினமையால் சிவஞான பெற்றதென்பதும், இவ்விரு நிகழ்வுகளால் சூரபதுமன் தன்னியல் பினையும் இறைவன் உபகாரத்தையும் உணர்ந்து கொண்டான். இதுவே சைவ சித்தாந்தம் காட்டும் உண்மைக் கொள்கை.)

பொழிப்புரை :

இத்துணை காலமும் என்னைப் பிணித்திருந்த செருக்குப் போய் விட்டது. சிவஞான அறிவு என்னுள் தலைப்பட்டு புகுந்து கொண்டன. முருகனின் அருட்பார்வை பெற்ற காரணத்தால் தூய்மை பெற்றுள்ள வலது தோளும் வலது கண்ணும் எனக்கு நன்மை விளையப் போகின்றது என்பதற்கு அடையாளமாகத் துடித்தன. சிவஞானம் புகுந்த காரணத்தால் பசுத்துவ நிலையில் அகன்ற யான், நான் யார் என்பதையும் உலகப் பொருள்கள் யாவும் பொய்ப்பொருள்கள் என்பதையும் உணரப் பெறுகிறேன். இவ்வாறு அறிவதாகிய பதியறிவு கைவரப் பெற்றதோடு அதனைக் காணும் உபகாரமாகக் காட்டி நிற்கும் தேவர்க்கும் தலைப்பாடுடைய இறைவனின் உண்மைத் தன்மையையும் மெய்ப்பொருள் அறிவையும் அப்பெருமானின் அழகுத்திருமேனி வடிவத்தையும் கண்டு கொண்டேன். இவை யாவும்

யான் எடுத்துக் கொண்ட முந்திய பிறவிகளிலும் இந்தப் பிறவியிலும் பெற்றுக்கொண்ட நற்றவப்பயன் என்பதையும் உணர்ந்து கொண்டேன் அன்றோ.

சூழுதல் வேண்டும் தாள்கள்
  தொழுதிடல் வேண்டும்அம்கை
தாழுதல் வேண்டும் சென்னி
  துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை
  அகன்றுநான் இவற்கு ஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம்
  தடுத்தது மானம் ஒன்றே. (444)

பதவுரை :

**சூழுதல் வேண்டும் தாள்கள்** - எனது கால்களால் இப்பெருமானை வலம் வர விரும்புகின்றேன் **தொழுதிடல் வேண்டும் அங்கை** - எனது அழகுக் கைகளால் இப்பெருமானை கூப்பித் தொழ வேண்டும் என எண்ணுகின்றேன். **தாழுதல் வேண்டும் சென்னி** - எனது தலை தாழ்த்தித் தாழ்ந்துநின்று இப்பெருமானை வணங்க வேண்டும் என எண்ணுகின்றேன் **துதித்திடல் வேண்டும் தாலு** - எனது நாக்குக் கூட அப் பெருமானுடைய திருநாமங்களைக் கூறித் துதித்துப் புகழ்ந்து நிற்கவேண்டும் எனக் கருதுகின்றேன். **ஆழுதல் வேண்டும் தீமை அகன்று** - இப்பிறவிக்குக் காரணமான தீமைகள் யாவும் அகலும்படி சிவபுண்ணியங்களை யான் செய்ய வேண்டும் **நான் இவற்கு ஆளாகி** - நான் இப்பெருமானால் ஆட்கொள்ளப்பட வேண்டும். அவர்க்கே ஆளாக வேண்டும் **வாழுதல் வேண்டும் நெஞ்சம்** - மனதிற்குள் எம்பெருமானோடு அத்துவித நிலையெய்திப் பேரானந்தப் பெருவாழ்வில் நான் திளைத்து இன்புறுதல் வேண்டும். **தடுத்தது**

மானம் ஒன்றே - இவ்வாறாக நான் மாறி நின்று வாழ்ந்து வழிபாடுகளைச் செய்ய வேண்டும் என மனதில் எண்ணிக் கொண்ட போதும், அவ்வாறு என்னைச் செய்ய விடாது தடுப்பது ஒன்று உளது. அதுதான் நான் இதுவரைகாலமும் கொண்டிருக்கும் அபிமானம் என்னும் உயிர்க்குணம் என்பது.

பொழிப்புரை :

எனது கால்களால் இப்பெருமானை வலம் வர விரும்புகிறேன். எனது (அழகுக்) கைகளால் இப்பெருமானை கூப்பித் தொழ வேண்டும் என எண்ணுகின்றேன். எனது தலை தாழ்த்தித் தாழ்ந்துநின்று இப்பெருமானை வணங்க வேண்டும் என எண்ணுகின்றேன். எனது நாக்குக் கூட அப்பெருமானுடைய திருநாமங்களைக் கூறித் துதித்துப் புகழ்ந்து நிற்க வேண்டும் என கருதுகின்றேன். இப்பிறவிக்குக் காரணமான தீமைகள் யாவும் அகலும்படி சிவபுண்ணியங்களை யான் செய்ய வேண்டும். நான் இப்பெருமானால் ஆட்கொள்ளப்பட வேண்டும். அவர்க்கே ஆளாக வேண்டும். மனதிற்குள் எம்பெருமானோடு அத்துவித நிலை எய்திப் பேரானந்த பெருவாழ்வில் நான் திளைத்து இன்புறுதல் வேண்டும். இவ்வாறாக நான் மாறி நின்று வாழ்ந்து வழிபாடுகளைச் செய்ய வேண்டும் என மனதில் எண்ணிக் கொண்ட போதும், அவ்வாறு என்னைச் செய்ய விடாது தடுப்பது ஒன்று உளது. அதுதான் நான்இதுவரை காலமும் கொண்டிருக்கும் அபிமானம் என்னும் உயிர்குணம் என்பது.

ஒன்னலர் பொருட்டால் ஏகி
உறுசமர் இழைத்த செம்மல்
தன்உரு அதனைக் காண்கில்
முனிவதே தகுதி யாகும்
வன்னிகொள் வெண்ணை யேபோல்
வலியழிந்து உருகிற்று என்றால்
என்னுடை வயத்த அன்றோ
உணர்ச்சியும் யாக்கை முற்றும். (445)

பதவுரை :

**ஒன்னலர் பொருட்டால் ஏகி** - எனது பகைவரான தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு இப் போர்க்களத்துக்கு வந்து **உறுசமர் இழைத்த செம்மல்** - என்னுடன் இத்தனை காலம் வரை நெருங்கிய போரினைச் செய்தவராகிய சிறப்புமிக்க முருகப்பெருமான் **தன்உரு அதனைக் காண்கில்** - இங்கு எடுத்துக்கொண்ட பெரிய வடிவத்தைப் நேர்நின்று பார்க்கும் போது. அவர்மீது **முனிவதே தகுதி யாகும்** - கோபம் கொள்வதே தக்க செயலாகும். அதனை விடுத்து மாறாக **வன்னிகொள் வெண்ணெயே போல் வலிஅழிந்து உருகிற் றென்றால்** - நெருப்பினில் இட்ட வெண்ணெய் தனது கெட்டித் தன்மை கெட்டு உருகுவதுபோல எனது உள்ளமும் உடலும் தன் வலிமை அழிந்து நெகிழ்ந்து கரைவனவென்றால் **என்னுடை வயத்த அன்றோ உணர்ச்சியும் யாக்கை முற்றும்** - என்னுடைய உள்ளமும் அறிவும் உடலும் என் கட்டுப்பாட்டில் இருந்து தன்வயமிழந்து அப்பெருமானிடம் வசப்பட்டு நிற்கின்றதே. இது என்ன அதிசயம்.

பொழிப்புரை :

எனது பகைவரான தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு இப்போர்க் களத்துக்கு வந்து என்னுடன் இத்தனை காலம் வரை நெருங்கிய போரினைச் செய்தவராகிய சிறப்புமிக்க முருகப் பெருமான் இங்கு எடுத்து கொண்டபெரிய வடிவத்தை நேர் நின்று பார்க்கும் போது. அவர்மீது கோபம் கொள்வதே (பகைமை) தக்க செயலாகும். அதனை விடுத்து மாறாக, நெருப்பினில் இட்ட வெண்ணெய் தனதுகெட்டித் தன்மை கெட்டு உருகுவது போல என் உள்ளமும் உடலும் தன் வலிமை அழிந்து (உறுதி கெட்டு) நெகிழ்ந்து கரைவன என்றால் எனது உள்ளமும் அறிவும் உடலும் என் கட்டுப்பாட்டில் இருந்து தன்வயமிழந்து அப்பெருமானிடம் வசப்பட்டு நிற்கின்றதே இது என்ன அதிசயம்.

ஏடவிழ் அலங்கல் மார்பன்
என்உடன் இந்நாள் காறும்
நீடிய இகல்போர் ஆற்றி
நீங்கலான் நின்ற தெல்லாம்
ஆடலின் இயற்கை என்றே
அறிந்தனன் அஃதான்று அன்னான்
சாடிய வேண்டும் என்னின்
யார்அது தாங்கற் பாலார். (446)

பதவுரை :

**ஏடவிழ் அலங்கல் மார்பன்** - விரிந்த பூவிதழ்களாலான கடப்ப மாலையைத் திருமார்பில் அணிந்து இருப்பவராகிய முருகப் பெருமான் **என்னுடன் இந்நாள் காறும்** - என்னுடன் இந்த நாள் வரையும் **நீடிய இகல்போர் ஆற்றி** - நீண்ட பகைமைமிக்க போரைச் செய்து **நீங்கலான் நின்றது எல்லாம்** - என்னை விட்டு நீங்காதவராய் நின்ற தன்மை எல்லாம் **ஆடலின் இயற்கை என்றே அறிந்தனன்** - அவர் என்னை ஆட்கொள்ளப் புரிகின்ற திருவிளையாடல்களின் ஒன்று என்பதை இன்று நான் நன்கு உணர்ந்து கொண்டேன். **அஃதான்று** - அஃதல்லாமல் **அன்னான் சாடிய வேண்டும் என்னின்** - அத்துணை அருட்கருணை கொண்ட அப்பெருமான் என்னை அழிக்கவேண்டும் என மனம் கருதுவாராயின் **யார் அது தாங்கற் பாலார்** - யார்தான் அதனைத் தடுத்து நிற்க வல்லவர் (ஒருவருமில்லை).

பொழிப்புரை :

விரிந்த பூவிதழ்களாலான கடப்ப மாலையைத் திருமார்பில் அணிந்து இருப்பவராகிய முருகப் பெருமான் என்னுடன் இந்த நாள் வரையும் நீண்ட பகைமைமிக்க போரைச் செய்து என்னை விட்டு நீங்காதவராய் நின்ற தன்மை எல்லாம் அவர் என்னை ஆட்கொள்ளப் புரிகின்ற திருவிளையாடல்களின் ஒன்று என்பதை இன்று நான் நன்கு உணர்ந்து கொண்டேன். அஃதல்லாமல்

அத்துணை அருட்கருணை கொண்ட அப்பெருமான் என்னை அழிக்க வேண்டும் என மனம் கருதுவா ராயின் யார்தான் அதனைத் தடுத்து நிற்க வல்லவர் (ஒருவருமில்லை).

ஏதமில் அமரர் தம்மை
யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தோர் பல்லோர்
அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை
விண்ணவர் பலரும் காணா
நாதன்இங்கு அணுகப் பெற்றேன்
நன்றதே ஆன தன்றே. (447)

பதவுரை :

**ஏதமில் அமரர் தம்மை** - என்மீது நினைந்தேனும் ஒரு குற்றமும் செய்யாத தேவர்களை **யான் சிறை செய்த தெல்லாம்** - நான் சிறைப் படுத்திப் பல கொடுமைகளைச் செய்து கொண்ட எல்லாவற்றையும் **தீது என உரைத்தோர் பல்லோர்** - தீமை தரும் செயல்கள் எனப் பலர் எனக்குப் புத்திமதி சொன்னார்கள். **அன்னதன் செயற்கையாலே** - அவ்வாறு நான் செய்து கொண்ட செய்கைகளினால் தானே **வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா** - வேதங்களாலும் பிரமதேவராலும் மற்றைய தேவர்கள் பலராலும் கூடத் தேடியும் காண முடியாத **நாதன் இங்க அணுகப் பெற்றேன்** - ஒப்பற்ற உயர் தலைவராகிய முருகப் பெருமான் இங்கு என் கண்முன்னே எழுந்தருளி வரப்பெற்றேன் **நன்று அதே ஆனது அன்றே** - அத்தீய செயல்களே நன்மைதரும் செயல்க்ளாக ஆயிற்று அல்லவா.

பொழிப்புரை :

என்மீது நினைந்தேனும் ஒரு குற்றமும் செய்யாத தேவர்களை யான் சிறைப்படுத்திப் பல கொடுமைகளைச் செய்து கொண்ட எல்லாவற்றையும் தீமை தரும் செயல்கள் எனப் பலர் எனக்குப் புத்திமதி சொன்னார்கள். அவ்வாறு நான் செய்து கொண்ட செயல்களினால் தானே, வேதங்களாலும் பிரமதேவராலும் மற்றைய தேவர்கள் பலராலும் கூடத் தேடியும் காணமுடியாத ஒப்பற்ற உயர் தலைவராகிய முருகப் பெருமான் (சிவபரம்பொருள்) இங்கு என் கண் முன்னே எழுந்தருளி வரப் பெற்றேன். அத்தீய செயல்களே நன்மை தரும் செயல்களாக ஆயிற்று அல்லவா.

ஒன்றொரு முதல்வன் ஆகி
 உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள்
 நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதுஓர் பெருமை பெற்றேன்
 வீரனும் நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும்
 இவ்வுடல் நிற்ப துண்டோ. (448)

பதவுரை :

**ஒன்றொரு முதல்வன் ஆகி உறைதரு மூர்த்தி** - தமக்குத் தாமே இணையாகி இத்திருமேனி வடிவங் கொண்டு நிற்கும் நிகரில்லாத தனி முதல்வனாம் முருகப் பெருமானின் **முன்னம் நின்றமர் செய்தேன் இந்நாள்** - மேதாவிலாசத்தின் முன்பாக இன்று வரை எதிர் நின்று பலவகைப் போர்களைச் செய்தேன். இவ்வாறு

செய்யவல்ல வீரர் வேறொருவருமில்லை **நெஞ்சினித் தளரேன் அம்மா** - இனிமேலும் எனது மனமானது தளர்ச்சி அடைய மாட்டேன் (அம்மா வியப்புக் குறித்த சொல்) இது ஆச்சரியமே. **நன்று இது ஓர் பெருமை பெற்றேன்** - இதனால் பெரும் நன்மையே வந்து சேரும். மற்றெவரும் அடைய முடியாத பெருமையையும் பெற்றுக் கொண்டேன் **வீரனும் நானே யானேன்** - உலகிலே வீரர்கள் என எண்ணப்படுவோர்களைப் பார்க்கினும் நானே பெரும் வீரன் என்னும் உயர்வும் பெற்றேன் **என்றும் இப்புகழே நிற்கும்** - எக்காலத்தும் இந்த புகழ்ச்சொல்லே நிலைத்து நிற்கும் **இவ்வுடல் நிற்பது உண்டோ** - அழிதற் தன்மையான இந்த உடல் எவ்வளவு காலத்துக்கு நிற்கும். நில்லாது அழிந்துவிடும் அன்றோ.

பொழிப்புரை :

தமக்குத் தாமே இணையாகி இத்திருமேனி வடிவம் கொண்டு நிற்கும் நிகரில்லாத தனி முதல்வராம் முருகப் பெருமானின் மேதாவிலாசத்தின் முன்பாக இன்று வரை எதிர்நின்று பலவகைப் போர்களைச் செய்தேன். இவ்வாறு செய்யவல்ல வீரர் வேறு ஒருவருமில்லை. இனிமேலும் எனது மனமானது தளர்ச்சி அடைய மாட்டேன். இது ஆச்சரியமே (அம்மா - வியப்புக் குறித்த சொல்). இதனால் பெரும் நன்மையே என்னை வந்து சேரும். மற்றெவரும் அடைய முடியாத பெருமையையும் பெற்றுக் கொண்டேன். உலகிலே வீரர்கள் என எண்ணப்படுவோர்களைப் பார்க்கினும் நானே பெரும் வீரன் என்னும் உயர்வும் பெற்றேன். எக்காலத்தும் இந்தப் புகழ்ச் சொல்லே நிலைத்து நிற்கும். அழிதற் தன்மையான இந்த உடல் எவ்வளவு காலத்துக்கு நிற்கும். நில்லாது அழிந்துவிடும் அன்றோ.

(சூரபன்மன் தனது அழிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதையும் உணர்ந்து கொண்டான்).

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



வானுளோர் சிறையை நீக்கி
 வள்ளலை வணங்கி இந்த
ஊன்உலாம் உயிரைப் போற்றி
 அளியர்போல் உறுவன் என்னில்
ஆனதோ எனக்கிது அம்மா
 ஆயிர கோடி அண்டம்
போனதோர் புகழும் வீரத்
 தன்மையும் பொன்றி டாவோ. (449)

பதவுரை :

**வான்உளோர் சிறையை நீக்கி** - சுவர்க்க உலகவாசிகளான தேவர்களைச் சிறையில் நின்று விடுவித்தும் **வள்ளலை வணங்கி** - அருள் வள்ளலான முருகப்பெருமானை பணிந்து போற்றி வணக்கம் செய்தும் **இந்த ஊன் உலாம் உயிரைப் போற்றி** - இந்த தசைகளோடு ஒன்றித்து நிற்கும் உயிரை ஒரு பொருட்டாக மதித்து பாதுகாத்தும் **அளியர்போல் உறுவன் என்னில்** - கீழ்மக்களைப் போல நானும் இவ் வாழ்க்கையை விரும்பி நிற்பேன் என்றால், ஐயோ, **ஆனதோ எனக்கிது அம்மா** - வலியனான எனக்கு இது ஒரு தகுதியான செயலாகுமா. இல்லையே. **ஆயிர கோடி அண்டம் போனதோர் புகழும்** - அந்த எளியவர் போல் நான் வாழ்வதாயின் ஆயிர கோடி அண்டங்களினையும் கடந்து பரந்த புகழும் **வீரத் தன்மையும்** - எனது வீர வன்மையும் தன்மையும் நிலவும்வியப்பும் **பொன்றிடாவோ** - அழிந்துபோய் விடாவோ, போய்விடுமே.

பொழிப்புரை :

சுவர்க்க உலகவாசிகளான தேவர்களைச் சிறையில் நின்று விடுவித்தும், அருள் வள்ளலான முருகப் பெருமானைப் பணிந்து போற்றி

வணக்கம் செய்தும் இந்தத் தசைகளோடு ஒன்றித்து நிற்கும் உயிரை ஒரு பொருட்டாக மதித்து பாதுகாத்தும், கீழ்மக்களைப் போல நானும் இவ்வாழ்க்கையை விரும்பி நிற்பேன் என்றால், ஐயோ, வலியனான எனக்கு இது ஒரு தகுதியான செயலாகுமா. இல்லையே. அந்த எளியவர் போல் நான் வாழ்வதாயின் ஆயிர கோடி அண்டங் களையும் கடந்து பரந்த புகழும், எனது வீரவன்மையும் தன்மையும் நிலவும் வியப்பும் அழிந்து போய்விடாவோ, போய்விடுமே.

என்னஇத் தகைய பன்னி
நிற்றலும் எவர்க்கும் மேலோன்
உன்னரும் தகைத்தாய் நின்ற
ஒருபெரும் தோற்றம் நீத்து
மின்னிவர் கலாபம் ஊர்ந்த
வியன்உருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போதம் மாற்றித்
தொன்மைபோ லாகச் செய்தான் (450)

பதவுரை :

**என்னஇத் தகைய பன்னி நின்றலும்** - அசுரர்களுக்கெல்லாம் மன்னவன் ஆகிய சூரபன்மன் இவ்வண்ணமாகத் தனது மனத்தோடு கூறிக்கொண்டு நிற்கின்ற வேளையில், **எவர்க்கும் மேலோன்** - எவ்வகைத் தேவர்களுக்கும் தேவனான மேன்மை உடைய முருகப் பெருமான் **உன்னரும் தகைத்தாய் நின்ற ஒருபெரும் தோற்றம் நீத்து** - வாக்கு மனோதீதனாக நின்று எக்காலத்தும் எவராலும் அடைய முடியாத, ஒரே பெற்றித்தாய் நிற்கின்ற தனது பேருருவத்தை மறைத்தருளி **மின்னிவர் கலாபம் ஊர்ந்த** - மின்னல் போலும் ஒளிவீசி நிற்கின்ற தோகையையுடைய மயில்வாகனத்தில் ஆரோகணித்து நிற்கும் **வியன்உருக் கொண்டு நண்ணித்** - வியக்கத்தக்க பாலமுருக வடிவம் தோன்றும்படியாக நின்றார்.

**துன்னலன் போதம் மாற்றித்** - மேலும், பகைவனாகிய சூரபன்மன் தன்னைப் பார்த்து உணரும்படியான நல்லுணர்ச்சியை நீக்கி, மாற்றி, மறைத்து **தொன்மைபோல் ஆகச் செய்தான்** - முன்பு போலவே பழைய மனநிலையை உண்டு பண்ணினார்.

பொழிப்புரை :

அசுரர்களுக்கெல்லாம் மன்னவன் ஆகிய சூரபன்மன் இவ் வண்ணமாகத் தனது மனத்தோடு கூறிக்கொண்டு நிற்கின்ற வேளையில், எவ்வகைத் தேவர்களுக்கும் தேவனான மேன்மை உடைய முருகப்பெருமான் வாக்குமானோதீதனாக நின்று எக்காலத்தும் எவராலும் அடைய முடியாத ஒரே பெற்றித்தாய் நிற்கின்ற தனது பேருருவத்தை (விஸ்வரூபத்தை, பரமேசுவர வடிவத்தை) மறைத்தருளி, மின்னல் போலும் ஒளிவீசி நிற்கின்ற தோகையையுடைய மயில்வாகனத்தில் ஆரோகணித்து நிற்கும் பாலமுருக வடிவம் தோன்றும்படியக நின்றார். மேலும், பகைவனாகிய சூரபன்மன் தன்னைப் பார்த்து உணரும்படியான நல்லுணர்ச்சியை நீக்கி, மாற்றி, மறைத்து முன்பு போலவே பழைய மனநிலையை உண்டு பண்ணினார்.

**காரணன் ஆகித் தானே**
**கருணையால் எவையும் நல்கி**
**ஆர்உயிர் முழுதும் மேவி**
**அனைத்தையும் இயற்றி நிற்கும்**
**பூரண முதல்வன் மைந்தன்**
**போதகம் அளித்து மாற்றிச்**
**சூரனை மயக்கஞ் செய்யும்**
**சூழ்ச்சியோ அரிய தன்றே.** (451)

பதவுரை :

**காரணன் ஆகித் தானே** - எப்பொருளுக்கும் தான் ஒருவரே மூல காரணனாகவும் நிமித்த காரணனாகவும் அமைந்தும் **கருணையால் எவையும் நல்கி** - தனது நிறைந்த அருட்கருணையால் உயிர்கள் உய்ந்து நற்கதி அடையும் பொருட்டு அவற்றிற்கு உடல், கருவி, உலகம், நுகர்வு ஆகியவற்றைக் கொடுத்தும் **ஆர்உயிர் முழுதும் மேவி** - எண்ணிலாத அரிய உயிர்க்கூட்டங்களில் அவையே தானேயாய் அத்துவிதமாய் கலந்து இருந்தும் **அனைத்தையும் இயற்றி நிற்கும்** - ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இவற்றை சடசித்துப் பொருள்கள் மீது இயற்றி தான் ஒருவனே என்றும் நிலையான பொருளாக நிற்கும் **பூரண முதல்வன் மைந்தன்** - பரிபூரண முதல்வரான (நாயகரான) சிவபிரானின் திருக்குமாரராம் முருகப்பெருமான் **போதகம் அளித்து மாற்றிச்** - தன் முன்னே நிற்கும் சூரபன்மன் தன் பேருருவைக் கண்டு அறிந்து கொள்ளச் சிறிது ஞான உணர்வைக் கொடுத்தும் அதனை நீக்கியும் **சூரனை மயக்கம் செய்யும்** - பின்னர் சூரபன்மனை மனமயக்கம் கொள்ளச் செய்யும் **சூழ்ச்சியோ அரிய தன்றே** - திருவிளையாடல்கள் அப்பெருமானுக்கு அருமைப்பாடான செயல்கள் அல்லவே.

பொழிப்புரை :

எப்பொருளுக்கும் தான் ஒருவரே மூல காரணனாகவும் நிமித்த காரணனாகவும் அமைந்தும், தனது நிறைந்த அருட்கருணையால் உயிர்கள் உய்ந்து நற்கதி அடையும் பொருட்டு அவற்றிற்கு உடல், கருவி, உலகம், நுகர்வு ஆகியவற்றைக் கொடுத்தும், எண்ணிலாத அரிய உயிர்க்கூட்டங்களில் அவையே தானேயாய் அத்துவிதமாய் கலந்து இருந்தும், ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இவற்றை சடசித்துப் பொருள்கள் மீது இயற்றி தான் ஒருவனே என்றும் நிலையான பொருளாக நிற்கும் பரிபூரண முதல்வரான (நாயகரான) சிவபிரானின் திருக்குமாரராம்

முருகப்பெருமான் தன் முன்னே நிற்கும் சூரபன்மன் தன் பேருருவைக் கண்டு அறிந்து கொள்ளச் சிறிது ஞான உணர்வைக் கொடுத்தும், அதனை நீக்கியும் பின்னர் அச்சூரபன்மனை மனமயக்கம் கொள்ளச் செய்யும் திருவிளையாடல்கள் அப்பெருமானுக்கு அருமைப்பாடான செயல்கள் அல்லவே.

தந்தையின் செய்கைகள், குணங்கள் மகனுக்கிருத்தல் இயல்பே. பரம்பொருளாகிய சிவபெருமான் நடாத்துகின்ற ஐந்தொழில்களையும், ஆன்ம ஈடேற்றுதற்காக அவர் செய்யும் திருவிளையாடல்களையும் அவருடைய திருக்குமாரராகிய முருகப்பெருமான் இயற்ற வல்லவராவர். எனவே, அக்குமரவேற் பெருமான் அச்செயல்களைப் புரிவது என்பது ஒரு வியப்பல்லவே!

இவ்வாறாக, முருகப்பெருமான் சூரபன்மனை மயக்கம் செய்த மாண்பினை தெளிவுறக் கண்டோம். நாமும் இங்கு சூரபன்மன் கண்ட பெருமான் காட்டிய பேருருவக் காட்சியை - பரமேசுவர வடிவத்தை - எமது மனதிலே நிறுத்தி எம்பெருமானின் திருவுருவத்தைக் கண்டு மகிழ்வோம். அம்மகிழ்வே எம்பெருமானை வாக்கு மனோதீத கோசரராய்க் கண்டு வழிபடும் வழியாகும். இங்கு கூறப்பட்ட பாடல் களையும் அவற்றின் பொருள்களையும் சிவநெறிச் செல்வர்கள் உணர்ந்து படிப்பார்களேயானால் கந்த புராணம் முழுவதையும் படிப்பதால் வரும் பயன்களைப் பெறுவர். இப்பாடல்கள் சைவ சித்தாந்தத்தை விளக்கும் சாத்திரமாகவும் முருகப் பெருமானை வழிபடும் தோத்திரமாகவும் இலக்கிய நயம் விரும்புவோர்களுக்கு பேரிலக்கியமாகவும் புராணிகர்களுக்கு ஒப்பற்ற சிவபுராணமாகவும் அமைந்திருப்பது உண்மையே. அம்மட்டோடு அல்லாமல் கந்த புராணம் முழுவதையும் படிக்க வேண்டும் என்னும் ஆவலையும் இது தூண்டும். முருகன் அடியார்கள் அப்பெருமானின் புராணத்தைப் படித்து இன்புறுவார்கள். அதற்கு குருபரனாக வரும் முருகப்பெருமான் முன் நின்று அருள்புரிவார் என்பதில் ஐயமில்லை. வேற்குமரன் அருள் பெற்றால் உலகில் வேறென்ன வேண்டும்! வாழ்க!

செல்வச் சிவநெறி தழைத்தோங்குக!
முருகன் அருள் எங்கும் நிலைபெறுவதாக!!

எண்ணிடும் வாழ்வு சேர்க்கும்
இனிமையும் வளனும் கூட்டும்
நண்ணிடும் யாவும் நாட்டும்
நலமுடன் நிறைவும் ஆக்கும்
விண்ணெறி உய்க்கும் மெய்ம்மை
விளங்கொளி சிவபு ராணத்
தண்தமிழ்க் கந்தன் காதை
காதலால் சூடி னோர்க்கே.

-மேலல்வையூர் ஆ. பொன்னையா

முற்றும்

13820

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

DR. R. KANAGALINGHAM
RTD A.M.O. RGD NO. 4732
ALVAI WEST. ALVAI

www.tamilthagam.com




**திருநெல்வேலி தென்னிந்திய**
**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்,**

522, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை,
சென்னை - 18. (044) 435 52 99.

### கிளை நிலையங்கள்

79, பிரகாசம் சாலை, சென்னை - 108.
91, கீழைத் தேர்த் தெரு, நெல்லை - 6.
70, தானப்ப முதலி தெரு, மது
24, நந்தி கோயில் தெரு, திருச்
28, நகர் உயர் பள்ளிச் சாலை, கு
36, செர்ரி ரோடு, சேலம் - 1.
18, இராச வீதி, கோவை - 1.

www.tamilthagam.com